வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.04.2024 புதன்கிழமை இதழ் : 108 பக்கங்கள் : 12

## தேர்தலை புறக்கணிக்கவும் முடியாது; சிங்களவர்களை நம்பவும் முடியாது!

# தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்தித்து முடிவு எடுங்கள்!

### தமிழ் அரசுக் கட்சி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்ரல் 17

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவாக சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ள தமிழ் அரசு கட்சியின் முன்னாள் எம். பியான ஞா. சிறீநேசன், தேர்தலை நாங்கள் புறக்கணிக்கவும் முடியாது. அதேநேரம் சிங்களவர்களை நம்பவும் முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**




மட்டக்களப்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடம் பல விதமான கருத்துகள் பரவுகின்றன. அந்தவகையில் ஒரு சாரார் இந்தத் தேர்தலை நிராகரிக்க வேண்டும், - வாக்களிப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்துகளைத் மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களுக்கு தேர்தல் மூலமாக அவர்களின் கருத்துகளை, எண்ணங்களைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. அந்தவகையில் தேர்தலைப் புறக்கணிப்பதால் என்ன விபரீதம் நடக்கும் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு உதாரணமாக 2005ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவும் மகிந்த ராஜபக்ஷவும் போட்டியிட்டனர். அந்த வேளையில் ஒரு கருத்து உருவாக்கப்பட்டது. தமிழர்கள் இந்த முறை தமது வாக்களிப்பை புறக்கணிக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. இதன் விளைவாக மிக மோசமான அடிப்படைவாத உணர்வுடைய மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

11

## சிவராத்திரி தின கைதுகள் குறித்து மனித உரிமைகள் குழு விசாரணை

வவுனியா, ஏப். 17

வெடுக்குநாறி மலையில் கடந்த சிவராத்திரி தினமான கடந்த மார்ச் 8ஆம் திகதி இடம்பெற்ற கைதுகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நேற்று நடத்தியது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய பணிமனையால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

வெடுக்குநாறிமலை சிவன் ஆலய செயலாளர், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் கருத்து வெளியிட்ட ஆலயத்தின் செயலாளர் கூறுகையில்,

“நாங்கள் தொல்லியல் இடங்களை சேதப்படுத்தினோம் என்று தொல்பொருள் திணைக்களத்தினர் சில ஆவணங்களை வழங்கியிருந்தனர். குறிப்பாக மலை உச்சியில் தீ மூட்டினோம் என்று குற்றஞ்சாட்டினர். இதனாலேயே கைதுகள் இடம்பெற்றன

11

## சஜித் அணியின் நால்வருக்கு ஐ. தே. க. பகிரங்க அழைப்பு!

கொழும்பு, ஏப். 17

ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த நான்கு முக்கியஸ்தர்களை பெயர் குறிப்பிட்டு தம்முடன் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.



தலதா அத்துக்கோரள, கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன ஆகியோருக்கே ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கே பண்டார அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன், ஏனைய உறுப்பினர்களையும் தம்முடன் இணையுமாறு கட்சியின்

11

## தமிழ் அரசின் மத்திய குழு வெள்ளியன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 17

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல் குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சி முகங்கொடுத்துள்ள வழக்குகள் தொடர்பிலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சிகளால் முன்மொழியப்பட்டுள்ள பொதுவேட்பாளர் விடயம் சம்பந்தமாகவும் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட

11

## ஜனாதிபதி வேட்பாளரை நான் நியமிக்க முடியாது!

### கைவிரித்தார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதித் தேர்தலுக்கு மொட்டுக் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை நியமிக்க தன்னால் முடியாது என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



இது மிக தீவிரமான நடவடிக்கை

11

## பாலித தேவரப்பெரும மின்சாரம் தாக்கி பலி!

கொழும்பு, ஏப். 17

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தேவரப்பெரும மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

வீட்டில் இரண்டு மின் சுற்றுக்களை இணைக்க முயன்ற போது மின்சாரம் தாக்கியதில் பாதிக்கப்பட்ட அவர் களுத்துறை



- நாகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலை

11

## இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டு




கொழும்பு, ஏப். 17

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா உள்ளிட்ட குழுவினர் இடையே கலந்துரையாடலொன்று

11

## தாய், மகளை வெட்டியவர் தனது உயிரை மாய்த்தார்!

யாழ்ப்பாணம், ஏப். 17

தாயையும் மகளையும் வெட்டிக் காயப்படுத்தியவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பு - பனிப்புலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஏற்கனவே, திருமணமாகி விவாகரத்தான அவர், காயமடைந்த பெண்ணுடன் காதல் உறவு கொண்டிருந்தார் என்றும் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்று தெரிய வந்ததையடுத்து ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்தே தாயையும் மகளையும் அவர் வெட்டினார் எனவும்

11

## சர்வோதயம் நிறுவுநர் காலமானார்!



கொழும்பு, ஏப். 17

சர்வோதயம் இயக்கத்தின் நிறுவுநரான கலாநிதி ஏ. டி. ஆரியரத்ன (வயது 92)

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாகத் தெற்கில் பல்வேறு சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் இணைந்து ராஜபக்ஷக்களை தோற்கடிப்பது பற்றி யோசிக்கத் தொடங்கினர். மாதுலுவாவே சோபித தேரர் அவர்களை ஒன்றிணைக்கும் பணியைத் தொடங்கியிருந்தார். அவர் பின்னால் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்தனர்.

அனைவரின் இலக்கும் ராஜபக்ஷக்களை வீழ்த்துவது என்ற ஒற்றை இலக்கைக் கொண்டதாக மட்டுமே இருந்தது.

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு தேர்தலில் புலிகளின் பகிஷ்கரிப்பு கோரிக்கையின் உதவியால் பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை வெற்றி கொண்ட பின்னர், அந்த வெற்றியின் “களிப்பில்“ இன்னும் இரண்டு தசாப்தங்களுக்கு தன்னை யாராலும் அசைக்கமுடியாது என்ற எண்ணத்தில் நாட்டில் எவ்வாறான ஆட்சியை செய்தார் என்பதற்கு விளக்கம் தேவையிருக்காது. அவரின் குடும்பத்தினர் தங்களை ஒரு மன்னரின் குடும்பமாக வரித்துக்கொண்டு நடத்திய ஆட்சியே அவர்களை அதிலிருந்து அகற்றவேண்டும் என்ற எண்ணத்தை அனைத்து தரப்பினருக்கும் உருவாக்கியது.

அவர்களுக்கு எதிராக இருந்த மக்கள் உணர்வையே மாதுலவாவே சோபித தேரர் அறுவடை செய்தார்.

ராஜபக்ஷவை வீழ்த்துவது ஒன்றிலேயே குறியாக இருந்தவர்கள் அவரை வீழ்த்துவதற்காக அவரது முகாமிலிருந்தே ஒருவரை தெரிவுசெய்தனர். மிக இரகசியமாக முன்னெடுக்கப்பட்ட அந்த “ஒப்ரேஷனுக்கு“ தலைமை தாங்கியவர் மங்கள சமரவீர. யாரும் எதிர்பாராத வகையில் மகிந்தவின் பாசறையின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை அவர்கள் தேர்வுசெய்தது மகிந்தவை வீழ்த்தும் அவர்களின் குறிக்கு வேண்டுமானால் சரியானதாக இருந்திருக்கலாம். ஆனால், அதற்கு பின்னர் அவர்கள் விரும்பியதுபோல அல்லது நினைத்ததுபோல நல்லாட்சியை வழங்குவதற்கு அவர் பொருத்தமானவரா என்பதை அவர்கள் யோசித்திருந்தார்களா என்பது தெரியவில்லை.

ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரியை தெரிவுசெய்தவர்கள், அந்த மைத்திரியால் ரணிலுடன் சேர்ந்து பயணிக்கமுடியுமா என்பது பற்றியோ அல்லது அவர்கள் இருவருக்கும் இடையே உறவைத் தொடரமுடியுமா என்பது பற்றியோ யோசித்திருந்தால் அதுபற்றி முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்திருப்பார்கள். இருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதலே யாரை வெளியேற்றுவதற்காக மைத்திரியை அழைத்து வந்தார்களோ அவரையே மைத்திரி பின்னர் பிரதமராக்கி அனைவரின் முயற்சியையும் கேலிக்கூத்தாக்கினார்.

இவை எல்லாம் பழைய சங்கதிகள்தான். ஆனால், இதனை எதற்காக இப்போது எழுதவேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

அந்தத் தேர்தலில் ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதற்காக அனைத்துத் தரப்பினரும் ஒன்றாக இணைந்தபோதிலும் அந்த இணைப்பில் சேர்ந்துகொள்ள ஜே. வி. பி. தயாராக இருக்கவில்லை. ஆனால், ராஜபக்ஷக்களை தோற்கடிக்கவேண்டும் என்பதில் மட்டும் ஒற்றுமைப்பட்ட ஜே. வி. பி., அந்த தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கடும் பிரசாரத்தில் ஈடுபட்டபோதிலும் மைத்திரி தலைமையிலான கூட்டணிக்கோ அதன் வேட்பாளரான மைத்திரிக்கு ஆதரவாகவோ பிரசாரம் செய்யவில்லை. தாம் தமது சார்பில் வேட்பாளரை நிறுத்துவதையும் தவிர்த்துக்கொண்டது.

“இந்த வீடு பிழையானது என்பதை சொல்லிய அதேவேளை அதற்காக மற்றைய வீடு சரி என்றும் சொல்லமாட்டோம். அது மக்கள் விருப்பம். அவர்கள் விரும்பினால் வாக்களிக்கலாம்” என்றது ஜே. வி. பி.

அதேகாட்சி ஒன்று அடுத்த தேர்தலில் காணப்படலாம் என்கிறார் தெற்கின் ஊடக நண்பர் ஒருவர்.

ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்யப்போகின்றது என்பதே இன்று மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கின்றது. தமது கட்சி சார்பில் ஒரு வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்பதில் கட்சியின் பெரும்பாலானவர்கள் விருப்பம் கொண்டுள்ள போதிலும் அப்படியொரு விஷப்பரீட்சையில் இறங்க, மகிந்த ராஜபக்ஷ தயாராக இல்லை என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அதனால் தான், ஜனாதிபதித் தேர்தல் குறித்து கட்சியினர் எவரும் பொது இடங்களில் எந்தவொரு கருத்தையும் முன்வைக்கக்கூடாது என்று தனது கட்சியினருக்கு அவர் உத்தரவிட்டிருக்கின்றார். அதேவேளை, கட்சியும் அது தொடர்பான முடிவை எடுக்கும் அதிகாரத்தை மகிந்தவிடம் ஒப்படைத்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை ராஜபக்ஷக்களின் ஆதரவும் தேவை. அதேவேளை அவர்களின் வேட்பாளராகத்தான் களம் இறங்குவதும் தனக்கு பாதகமானது என்ற கணிப்பில் இருக்கிறார். அதனால்தான் அவர் சுயாதீனமான வேட்பாளராகவே களம் இறங்குவார் என்று அவர் தரப்பில் திரும்பத்திரும்ப கூறப்படுகின்றது.

ராஜபக்ஷக்களின் வேட்பாளராகவோ அல்லது அவர்களின் ஆதரவுடனேயோ போட்டியிட்டால் அது சிறுபான்மையினர் வாக்குகள் தனக்குக் கிடைப்பதைப் பாதிக்கச் செய்யும் என்று ரணில் நினைக்கிறாரெனக் கூறப்படுகின்றது.

இதுதொடர்பான இறுதி முடிவை எடுப்பதற்காகவே, அடுத்த வாரம் ரணில்- மகிந்த- பஸில் சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது. இந்தச் சந்திப்பில் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அநேகமாக, இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் ஜே. வி. பி. செய்ததையே இந்தத் தேர்தலில் மகிந்த தரப்பு செய்யலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜே. வி. பியின் கடந்த கால வரலாறுகளை மக்களுக்கு நினைவுபடுத்தும் வேலையை மகிந்த தரப்பு மிகப்பெரிய அளவில் மேற்கொள்ளத் தயாராகி வருகின்றதாம். மகிந்தவின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் அம்பாந்தோட்டையில் அவர்களுக்கு தொடர்ந்து குடைச்சல் கொடுப்பவர்கள் இந்த ஜே. வி. பியினர் என்பதும் கவனிக்கத்தக்கது.

**- ஊர்க்குருவி.**

# 31 சொகுசு பஸ்கள் மீண்டும் பயன்பாட்டுக்கு!



கொழும்பு, ஏப். 17

சேதம் அடைந்த 31 சொகுசு பஸ்கள் புனரமைக்கப்பட்டு நெடுஞ்சாலையில் இயங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பணிப்பாளர் குஷான் வகொடோபொல தெரிவித்தார்.

அத்துடன் மொறட்டுவை, கட்டுப்பெத்த டிப்போவில் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக பாழடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மேலும் 30 சொகுசு பஸ்கள் அடுத்த மூன்று மாதங்களில் புனரமைக்கப்பட்டுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட சொகுசு பஸ்கள் பல்வேறு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மொறட்டுவை, கட்டுப்பெத்த உள்ளிட்ட பல டிப்போக்களில் பல வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அதிவேக நெடுஞ்சாலையில் 17 சொகுசு பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அது 48 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசிந்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இத்தேர்வுகளின் விபரங்களை அறியவும் விண்ணப்பப்படிவத்தைப் பெறவும் 0773492306 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெறமுடியும். நேரடியாக சைவபரிபாலன சபை, இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 30. 04. 2024 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### 2024 புத்தாண்டு காலத்தில்

# அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் ரூ. 8 கோடி உயர்வு

கொழும்பு, ஏப். 17

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த புத்தாண்டு காலத்தில் அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் 8 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான 06 நாட்களில் அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் 235 மில்லியன் ரூபாயாக பதிவாகியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (எ)

# தமிழர்களின் சுமைதாங்கும் தர்ம தேவதையாக டக்ளஸ்!

## யாழ். பல்கலை. துணைவேந்தர் புகழாரம்




யாழ்ப்பாணம், ஏப். 17

ஆயுதப் போராட்ட காலங்களிலும் சரி ஜனநாயக வழிமுறையினூடாகவும் சரி தமிழ் மக்களின் சுமைதாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்து வருகின்றார் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிறீ சற்குணராஜா தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இன்றுள்ள அரசியல்வாதிகளுக்குள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேறுபட்டவராகவே இருக்கின்றார். அவர் மக்களுக்கான தேவைப்பாடை அறிந்து அவர்களது நலன்கள், அவர்களது எதிர்காலம், அவர்களது பொருளாதாரம் என்பன எவ்வாறானதாக இருக்க வேண்டும் அல்லது கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொருளாதார கட்டமைப்பை எவ்வாறு உருவாக்கி கொடுக்க வேண்டும் என்பதிலேயே அதிக கரிசனையானவராக இருக்கின்றார்.

அந்தவகையில் தமிழ் மக்கள் இவ்வாறான ஒருவரை மிகவும் நேசிப்பவர்களா இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் கல்வித்தரம் மேலும் உயர்வடைவதற்கான பல்வேறு முயற்சிகளை குறிப்பாக எவ்வாறான தடைகள் இருந்தபோதிலும் அதன் உச்சிவரை சென்று அவற்றை உடைத்து வெற்றி பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

இதற்கு கிளிநொச்சி அறிவியல் நகரும் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் சான்று பகர்கின்றன. அதுமட்டுமல்லாது பின்தங்கிய கிராமங்களின் விளையாட்டுத்துறை, கல்வி ஆகியவற்றில் மட்டுமல்லாது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரங்களிலும் அதிக அக்கறை செலுத்தி வருவதை பார்க்க முடிகின்றது.

அதேவேளை, அமைச்சரின் அரசியல் சாணக்கியத்தினூடாக தொழில்வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

அதேபோன்று எதிர்காலத்திலும் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் ஒரு தகுதியானவராக காணப்படுகின்றார்.

இந்த யதார்த்தத்தை புரிந்து யாழ். பல்கலைக்கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினர் மட்டுமல்லாது மக்களது முன்னெடுப்புக்களும் அமைந்தால் அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகளும் சிறப்பானதாக அமையும் என்பதுடன் அது வெற்றிபெற வாழ்த்துவதாகவும் துணைவேந்தர் கூறினார். (எ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
17.04.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய எதிர்காலம்?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியத்துக்குள்ளும் – தமிழ்த் தேசிய எதிர்நிலை அரசியலுக்குள்ளும் சிக்கி சிதைவின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. நீதிமன்றத்துக்குள் சிக்கிக்கிடக்கும் கட்சியின் எதிர்காலம் தொடர்பான கேள்விக்கு ஏதோவொரு வகையில் பதில் கிடைத்தாலும்கூட தமிழ் அரசுக் கட்சி அதன், தமிழ்த் தேசிய கற்பை நிரூபிப்பது மிகவும் கடினமானது. ஏனெனில், தேவையற்ற உட்கட்சித் தேர்தல் ஒன்றால் அது ஏற்கனவே நெருக்கடியின் உச்சத்துக்குச் சென்றுவிட்டது. இவ்வாறானதொரு பின்னணியில், அதன் தமிழ்த் தேசிய கற்பை மீளவும் எவ்வாறு நிரூபிக்கப் போகின்றது என்பதே தமிழ் அரசுக் கட்சிக்கு முன்னாலுள்ள பிரதான – அதேவேளை தவிர்த்து ஓடவே முடியாத நெருக்கடியும் சவாலுமாகும்.

தமிழ் அரசுக் கட்சிக்கான புதிய தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலானது கட்சிக்குள் தமிழ்த் தேசியம் மற்றும் தேசிய எதிர்நிலை என்னும் இரண்டு பிரிவுகளை உருவாக்கிவிட்டது. இந்த இரண்டு பிரிவுகளும் ஓரணியில் இணைந்து பணியாற்றுவது முடியாத காரியம். ஏனெனில், இது கற்புநெறிக்கும் பால்வினைத் தொழிலுக்கும் இடையிலான பிரச்னை. இரண்டும் எவ்வாறு ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியும்?

தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க முற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதன் கோர முகத்தைக் காண்பிக்கும் – உள் சிக்கல்கள் மிகவும் அசிங்கமாக வெளிப்படும். தற்போது அதனைத் தெளிவாகவே காணமுடிகின்றது. தமிழ்த் தேசிய நிலையில் நிற்க வேண்டுமென்று கருதுவோர் – ஜனாதிபதித் தேர்தலில் கண்ணை மூடிக்கொண்டு வழமைபோல் மக்கள் வாக்களிக்க முடியாதென்னும் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை புறந்தள்ள முயற்சிக்கும் அணியினரோ மீண்டும் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருடன் பயணிப்பதை நியாயப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான பின்புலத்தில்தான் தமிழ் அரசு கட்சியின் ஓர் அணியினர் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் தென்னிலங்கையில் இனவாத சக்திகள் வலுவடையுமென்று பழைய பஞ்சாங்கத்தில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கணிக்குமாறு கூறிவருகின்றனர்.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவின்போது தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி தமிழ் அரசுக் கட்சிக்குள் தங்களின் செல்வாக்கை நிரூபித்தவர்களோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். தமிழ்த் தேசிய நிலையில் சிந்திப்பவர்கள் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதிரிப்பது தவிர்க்க முடியாதது. அதனை அவர்கள் நன்கறிவார்கள்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிக்க வேண்டுமென்றால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை நிராகரிக்க முடியாது. அதற்கு தமிழ் அரசுக் கட்சியே தலைமையேற்க வேண்டும். ஆனால், ஓர் அணியினர் அதனைத் தடுப்பதற்காக எந்த எல்லைக்கும் போகக்கூடும். இவ்வாறான தொரு பின்புலத்தில் ஒப்பீட்டு அடிப்படையில் பலமான நிலையிலிருக்கும் தமிழ் அரசின் தமிழ்த் தேசிய அணியினர் என்ன செய்யப் போகின்றனர். இந்தக் கேள்விக்கான பதிலில்தான் தமிழ் அரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய எதிர்காலம் தங்கியிருக்கின்றது.






# வட மாகாண புதுவருட விழா வவுனியா நெடுங்கேணியில்

வவுனியா, ஏப். 17

வவுனியா நெடுங்கேணியில் வடக்கு மாகாண புத்தாண்டு விழா நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், தொழில்துறை திணைக்களம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் இணைந்து நடத்திய குறித்த நிகழ்வானது நெடுங்கேணி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது பாரம்பரிய முறையில் விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு தமிழ் சிங்கள கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரிய உணவு கண்காட்சிகளும் இடம் பெற்றன.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஷ்குமார், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் மற்றும் முக்கியஸ்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கிரீஸ் மரம் முறிந்து விழுந்து 5 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 17

கம்பளை, ராஜஅலகம பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டு விழாவில் கிரீஸ் மரம் முறிந்து வீழ்ந்ததில் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் சிகிச்சை பெற்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த புத்தாண்டு கொண்டாட்டம் நேற்று முன் தினம் ராஜஅலகம் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பல மணி நேர முயற்சியின் பின்னர் ஒருவர் மீது ஒருவர் ஏறி கிரீஸ் மரத்தில் இருந்து கொடியை எடுக்க முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மரம் விழுந்த போது ஐந்து வீரர்களும் மரத்தில் ஏறிக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.




அமைப்பாளர்கள் தலைகீழாக நட்டதால் பலம் இழந்து மரம் விழுந்ததாக அத்தகல பொலிஸார் தெரிவித்தனர்.

கிரீஸ் மர பரிசுத் தொகையாக 15,000 ரூபாயும், புத்தாண்டு விழாவைக் காண வந்தவர்கள் வசூலித்த தொகையுடன் காயமடைந்த போட்டியாளர்களுக்கு 37,000 ரூபாயும் வழங்கப்படவிருந்தது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உயரதிகாரி உதவுவார். உங்களிடம் அக்கறை நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். மேலதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். போராடி வெல்லும் நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டுவெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**விருட்சிகம்**
கடந்த 2 நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் லாபம் உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும்.

**மகரம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உயரதிகாரிகளுக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கும்பம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

# தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது!

## நாளை மறுநாள் வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 17
தமிழ்நாட்டில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 19ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதனால், 39 பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளிலும் இன்று மாலையுடன் பிரசாரம் முடிவுக்கு வருகின்றது.

தேர்தல் தொகுதிக்கு தொடர்பு இல்லாதவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தமிழகத்தில் இறுதி நிலவரப்படி 39 மக்களவை தொகுதிகளிலும் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தி. மு. க. தலைமையிலான இந்தியா கூட்டணி, அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணி, பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி என நான்குமுனை போட்டி நிலவுவதால், தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்காக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கச்சதீவு குறித்து தேர்தல் அறிக்கையில் பா. ஜ. கட்சி ஏன் குறிப்பிடவில்லை?

## கேட்கிறார் சிதம்பரம்

காரைக்குடி, ஏப். 17
பா. ஜ. க. தனது தேர்தல் அறிக்கையில் கச்சதீவு குறித்து ஏன் குறிப்பிடவில்லை? என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கை 4 மாதங்களாகத் தயாரிக்கப்பட்டது. பா. ஜ. க. தேர்தல் அறிக்கையை 14 நாட்களில் தயாரித்துள்ளனர். இந்த 14 நாட்களில் 15 இலட்சம் பரிந்துரைகளை பரிசீலித்ததாக கூறுகின்றனர். இதற்காக கின்னஸ் சாதனை புத்தகத்தில் அவர்களுக்கு இடம் தர வேண்டும்.

கச்சதீவு குறித்து பிரதமர் முதல்எல்லோரும் பேசினார்கள். ஆனால், தேர்தல் அறிக்கையில் கச்சதீவு குறித்து ஏன் குறிப்பிடவில்லை? 10 ஆண்டாக அரைத்த மாவையே தேர்தல் அறிக்கையில் அரைத்துள்ளனர். அதை மக்கள் நிராகரிப்பார்கள். காங்கிரஸ் தேர்தல் அறிக்கைக்கு மக்களிடம் அமோக வரவேற்பு உள்ளது - என்றார். (ஐ)

# தி. மு. கவின் ஆட்சியில் சகல துறைகளிலும் ஊழல்!

## பழனிசாமி சாடல்

சென்னை, ஏப். 17
அ. தி. மு. கவைப் பற்றியே விமர்சித்துக் கொண்டிருக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலின், தனது ஆட்சியில் செய்ததை சொல்லி வாக்குக் கேட்க முடியவில்லை. தி. மு. க. ஆட்சியில் எல்லா துறைகளிலும் ஊழல் நடைபெறுகிறது. பணம் கொடுக்காமல் எந்த வேலையும் நடப்பதில்லை.

தமிழகத்தில் போதைப் பொருட்கள் எளிதாகக் கிடைக்கின்றன. இதனால் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நான் அரசியலுக்கு வந்து 50 ஆண்டுகள் ஆகின்றது. ஆனால், அரசியலுக்கு வந்து 5 ஆண்டு கள்கூட ஆகாத ஒருவர் (அண்ணாமலை) 2024 தேர்தலுக்குப் பிறகு அ. தி. மு. க. இருக்காது என்கிறார். தம்பி உன்னைப் போல எத்தனை பேரை அ. தி. மு. க. பார்த்துள்ளது. காணாமல் போனால் நீ பொலிஸ் தானே கண்டுபிடித்துக் கொடு. விரக்தியின் விளம்பில்தான் இப்படி பேசுகிறார். பொறுமையாகப் பேசு. அ. தி. மு. கவில் 2.16 கோடி பேர் உள்ளனர். உங்கள் கட்சியில் விரல் விட்டு எண்ணும் அளவிலே உள்ளனர். எதைப் பேச வேண்டுமோ அதை மட்டும் பேச வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ் மொழியை நேசிப்பவர்கள் பா. ஜ. கவை நேசிக்கின்றனர்!

## இந்திய பிரதமர் மோடி


திருநெல்வேலி, ஏப். 17
தமிழ் மொழியை நேசிக்கும் எல்லோரும் பா. ஜ. கவை நேசிக்க ஆரம்பித்துள்ளீர்கள். இதனால், தேர்தல் அறிக்கையில் தமிழ் மொழிக்கு உலக அங்கீகாரம் பெறப்படும் என சொல்லியுள்ளோம் - என்று இந்திய பிரதமர் மோடி கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் நடந்த தேர்தல் பிரசாரத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தி. மு. க., காங்கிரஸ் கூட்டணியினர் கச்சதீவை துண்டித்து வேறுநாட்டுக்கு கொடுத்தனர். இவர்கள் செய்த துரோகத்தால் மீனவர்கள் பல தலைமுறைகளாக தண்டிக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாடு போதையை நோக்கிச் செல்கிறது. இங்கு குடும்ப அரசியலில் உள்ளவர்கள் அதை ஊக்குவிக்கிறார்கள். பல கோடிக்கு போதை வர்த்தகம் நடக்கிறது. போதை மாபியா யாருடைய பாதுகாப்பில் இருக்கிறது என்பது குழந்தைக்குக் கூட தெரியும். போதை பொருட்கள் நடமாட்டத்தை இவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இதனை வேடிக்கை பார்க்கமாட்டேன் - என்றார்.

# தண்ணீர் தர முடியாதது அரசு அல்ல!




கடலூர், ஏப். 17
நாட்டு மக்களுக்கு தண்ணீர் கூட தர முடியாத அரசு அரசல்ல... அது வெறும் தரிசு என்று கடலூரில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

"தேர்தல் நேரத்தில் அம்புலன்ஸ் சென்றாலே பயமாகத்தான் உள்ளது. நோயாளிகள் செல்ல வேண்டிய அம்புலன்ஸில் எத்தனை கோடி ரூபாய் செல்கிறதோ? அம்புலன்ஸ்களில்தான் அதிகளவில் பணம் கடத்தப்படுகிறது. நாங்கள் தேர்தலில் தனித்து நிற்பதால்தான் எதற்கும் அஞ்சாமல் துணிந்து பேசுகிறோம். இது தலைவர்களுக்கான தேர்தலா? அல்லது தரகர்களை தேர்வு செய்வதற்கான தேர்தலா? என்று மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

இந்தியாவிலேயே அதிகமாக கர்ப்பப்பை வாடகைக்கு விடும் பெண்கள் உள்ள பகுதி குஜராத். அதுதான் குஜராத் மொடல். அதுபோல் இந்தியாவில் அதிக திருடர்கள் தலைவர்களாக இருப்பது, தமிழகத்தில் தான். வாக்குக்காக காசு கொடுக்கிறவன் பாவி, அதை வாங்கி கொண்டு வாக்கு போடுகிறவன் தேசத் துரோகி - என்றார்.

# காதலியையும் தாயையும் அதிகாலை வெட்டிவிட்டுக் காதலன் உயிர்மாய்ப்பு!

## பனிப்புலம் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

**இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காதலியையும் அவரது தாயாரையும் கத்தியால் வெட்டிய பின்னர் காதலனும் தூக்கிட்டு உயிர்மாய்த்த சம்பவம் பதிவாகியுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.**

பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த 35 வயதான குணதிலகம் பிரணவன் எனும் இளைஞன் அதே பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவரை காதலித்து வந்த நிலையில் வீட்டாரிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை வீட்டு வளவினுள் புகுந்து மலசலகூடத்தினுள் ஒளித்திருந்த இளைஞன் 4 மணியளவில் வீட்டில் உறங்கிய நிலையில் இருந்த காதலியையும் அவரது தாயாரையும் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து காயமடைந்த நிலையில் இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து இளைஞனும் பனிப்புலம் பகுதியில் உள்ள வளவொன்றினுள் தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார்.

இது குறித்து ஆரம்பகட்ட விசாரணைகளை இளவாலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# இலங்கையில் பயிரிடப்படவுள்ள உலகின் சுவையான அன்னாசி!

கொழும்பு, ஏப். 17

உலகின் மிகவும் பிரபலமான அன்னாசி வகைகளில் ஒன்றான எம்.டி 2 அல்லது சுப்பர் சுவீற் அன்னாசிப்பழத்தை இலங்கையில் பயிரிடுவதற்கு உடனடியாக பரிந்துரைக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த அன்னாசி வகைக்கு உலக சந்தையில் அதிக கிராக்கி இருந்தாலும், அந்த அன்னாசி வகையை இலங்கையில் பயிரிட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.



இந்த நிலையில், குறித்த அன்னாசி வகையை இலங்கையில் பயிரிடும் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், குறித்த அன்னாசி வகையை பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கை - இஸ்ரேல் இடையே விமான சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 17

இலங்கை மற்றும் இஸ்ரேல் இடையிலான விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் மோதல் நிலைமைகளால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாட்களில் இஸ்ரேலுக்கு பயணிப்பதற்காக விமான ஆசனங்களைப் பதிவு செய்த இலங்கையர்கள், அந்தந்த நிறுவனங்களைத் தொடர்புகொண்டு பயணத் திகதியை மாற்றிக்கொள்ளுமாறு இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# புலம்பெயர் ஊழியர் அனுப்பும் பணம் 8.7 சதவீதம் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 17

புலம்பெயர் ஊழியர்கள் அனுப்பும் பணம் கடந்த ஆண்டைவிட 8.7 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை 1,536.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறப்பட்ட புலம்பெயர் ஊழியர்களின் பணம் 1,432.2 மில்லியன் டொலர்களாகும்.

இதேவேளை, சுற்றுலா பயணிகளின் வருகையும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 89.4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதற்கமைய சுற்றுலா வருகையின் மூலம் கிடைத்த வருவாய் 1,025.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மதவாச்சி பொலிஸாரின் அடாவடி; கண்டிக்கும் சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஏப். 17

மதவாச்சி போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினால் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த 7ஆம் திகதி மதவாச்சி - மன்னார் வீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இளைஞன் ஒருவரும் அவரது நண்பரும் சிறிய ரக லொறியில் பயணித்த போதே இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

இதன்படி, போக்குவரத்து பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரது ஒரு விதைப்பையை சத்திர சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும் போது காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்வதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

அத்துடன், இத்தகைய கண்டிக்கத்தக்க செயல்கள் நீதி மற்றும் மனித உரிமைகளின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவது மட்டுமல்லாது, சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான செயல்பாடுகள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகளை மீறுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இத்தகைய நடவடிக்கைகள் அரசியலமைப்பின் 11 ஆவது பிரிவை முற்றிலும் மீறுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வழக்கை கூர்ந்து கண்காணிப்பதுடன், இதுபோன்ற கொடூரமான செயல்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் அதிகாரிகளை வலியுறுத்தியது. (அ)

# கோட்டையில் விபத்திற்குள்ளான ரயிலின் சாரதி பணி இடைநீக்கம்

கொழும்பு, ஏப். 17

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் ரயிலொன்று மோதி விபத்திற்குள்ளான சம்பவத்துடன் தொடர்புடைய ரயில் சாரதி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மாலை சிலாபம் நோக்கி பயணித்த ரயிலொன்று கோட்டை ரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் மோதி விபத்திற்குள்ளானது.

விபத்தினால் மேடை கடுமையாகச் சேதமடைந்த போதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பின்னர் குறித்த ரயிலுக்கு பதிலாக வேறு ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. (அ)

# உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட எல்லைவேலி அடித்து உடைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தை சுற்றி அமைக்கப்பட்ட எல்லை வேலியை பிரதேச இளைஞர்கள் அடித்து உடைத்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலியை உடைத்தவர்களுக்கு எதிராக ஆலய தர்மகர்த்தா அச்சுவேலி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். எல்லை வேலிக்கு எதிராக பிரதேச மக்களில் ஒரு பகுதியினரும் முறைப்பாடு செய்துள்ளனர்.

சாதிப் பாகுபாடு காரணமாக இந்த வேலி அமைக்கப்பட்டதாக ஒரு பகுதியினர் குற்றம்சாட்ட, ஆலய நிர்வாகம் அதை மறுத்துள்ளது. பிரச்னையை திசைதிருப்ப சாதிய குற்றச்சாட்டு சுமத்தப்படுவதாக



அவர்கள் கூறுகிறார்கள். இத்தனை வருடம் இல்லாத வேலி இப்போது எதற்கு என பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# யாழில் இரண்டரை கோடி ரூபாயை மோசடி செய்த பெண் கொழும்பில் கைது

கொழும்பு, ஏப். 17

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களிடம் சுமார் 2 கோடியே 50 இலட்ச ரூபாய் பணத்தை மோசடி செய்து, கொழும்பில் தலைமறைவாகி இருந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகவும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களை பெற்று தருவதாகவும், சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரங்களைச் செய்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரிடம் சுமார் இரண்டரை கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்துள்ளார்.

மோசடி தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்தவேளை குறித்த பெண் கொழும்பில் பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் கொழும்பு பொலிஸாருக்கு அறிவித்து, பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கொழும்பிலும் அப்பெண் மோசடிகளில் ஈடுபட்டுள்ளாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும், அதன் பின்னர் யாழ்ப்பாண பொலிஸாரிடம் அவரை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே மீனவர் பிரச்னை பற்றி பேசவேண்டும்

## எம். ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 17

**மீனவர்கள் பிரச்னைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இழுவைமடி தொடர்பில் நான் கொண்டு வந்த தனிநபர் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டது. அதை நடைமுறைப்படுத்தாமல் இருந்தால் இந்த நிலை நீடிப்பதற்கான ஒரே ஒரு காரணமாக இருந்தது.

தற்போது அது நடைமுறைப் படுத்தப்படுவதாக அறிகின்றேன்.

இழுவை மடி விவகாரத்துக்கு முடிவு கொண்டு வரப்படவேண்டும் என 2016 ஆம் ஆண்டில் ஒரு கூட்ட அறிக்கையை இலங்கை - இந்திய அரசாங்கங்கள் விடுத்திருந்ததைத் தொடர்ந்து தான் அந்த சட்டமும் இயற்றப்பட்டது.

மாநில அரசுக்கு இந்த இழுவை மடிப் படகுகளில் ஈடுபடுபவர்களுடன் சம்பந்தம் இருக்கலாம். ஆகையினாலே அவர்களுடனும் பேசவேண்டும் என்கின்ற ஒரு கருத்து இருக்கிறது-என்றார். (அ)

# மாதாந்த எரிபொருள் விற்பனை அதிகரிப்பு



கொழும்பு, ஏப். 17

இலங்கையில் மாதாந்த எரிபொருள் விற்பனை அதிகரித்து வருவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் தனது எக்ஸ் கணக்கில் குறிப்பொன்றை இட்டு இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, மார்ச் மாதத்தில் எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு, இந்த நாட்டில் எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மாதாந்த அறிக்கைகளையும் அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

எவ்வாறாயினும், எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தை மேற்கோள் காட்டி, இந்த நாட்டில் எரிபொருளின் விலை ஐம்பது வீதத்தால் குறைந்துள்ளதாக முன்னர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)




# வவுனியாவை வந்தடைந்த அன்னை பூபதியின் ஊர்தி

வவுனியா, ஏப். 17

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நேற்று வவுனியாவை வந்தடைந்த நிலையில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் நேற்று வவுனியாவை வந்தடைந்தது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டப் பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொங்கு தமிழ் நினைவுத்தூபி, பண்டார வன்னியன் நினைவு சதுக்கம், கோவில் குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் சென்றதுடன் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி ஈகச்சுடரினை ஏற்றி வைத்ததுடன், தாய்மாரால் மலர்மாலை அணிவித்ததையடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வலி.வடக்கிலிருந்து யாழ்.நகருக்கு புதிய பஸ் சேவை நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஏப். 17

வலிகாமம் வடக்கு வயாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடை சந்தியில் இருந்து யாழ் நகருக்கான பஸ் சேவையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கடற்தொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் வயாவிளான் பகுதிக்குச் சென்றிருந்த சமயம் குறித்த பகுதி மக்கள் தமது போக்குவரத்து பிரச்னைகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் போக்குவரத்து பிரச்னையை சீர் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் குறித்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரின் பணிப்புக்கமைய வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நேற்று குறித்த சேவையை முன்னெடுக்க ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கமையவே நேற்று காலை 07 மணியளவில் குறித்த பஸ் சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இதேநேரம் குறித்த பஸ் சேவையானது வயாவிளான் சுதந்திரபுரம் ஊடாக வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி பொன்னையா வீதி வழியாக குரும்பசிட்டி, கட்டுவன் சந்தி ஊடாக சென்று தெல்லிப்பழை வைத்தியசாலையை அடைந்து கே.கே.எஸ் வீதி வழியாக யாழ். நகரை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வறுத்தலைவிளான் சாந்தை சந்தி வரையிலான சேவையை தையிட்டி ஆவளைச் சந்தி வரை நீடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஆரம்ப வைபவமும் நேற்றுக் காலை 6.30 மணிக்கு கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 17

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன் தினத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த சில வாரங்களாக ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரிப்பை பதிவு செய்வந்த நிலையில் திடீர் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதங்களின் படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 20 சதமாக பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 303 ரூபா 54 சதமாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, வர்த்தக வங்கிகளிலும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

செலான் வங்கியில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை முறையே 293 ரூபா மற்றும் 302 ரூபா 50 சதமாக நிலையாக காணப்படுகின்றது.

என்.டி.பி வங்கியில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 292 ரூபா 15 சதமாக பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 303 ரூபா 15 சதமாக பதிவாகியுள்ளது

மக்கள் வங்கியின் கூற்றுப்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 293 ரூபா 46 சதமாக பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 303 ரூபா 39 சதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன் கொமர்ஷல் வங்கியில், டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 292 ரூபா 98 சதமாக பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 302 ரூபா 25 சதமாக பதிவாகியுள்ளது.

இதேவேளை சம்பத் வங்கியில் டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 25 சதமாக பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 303 ரூபா 25 சதமாக பதிவாகியுள்ளது. (அ)

# உமா ஓயா திட்டத்தின் நிர்மாண பணி நிறைவு

## இம்மாத இறுதியில் திறப்பு

கொழும்பு, ஏப். 17

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் எனத் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் டி.சி.எஸ். ஏலகந்த தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாளாந்தம் 80 முதல் 100 மில்லியன் ரூபா பெறுமதியான நீர் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2011 ஆம் ஆண்டு ஈரானிய அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் 514 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதாகும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பதுளைக்கு 65 உயர் அழுத்த மின் கம்பிகள் ஊடாக 23 கிலோமீற்றர் தூரம் கொண்டு செல்லப்பட்டு தேசிய மின்வட்டத்துடன் இணைக்கப்படவுள்ளது.

அத்துடன், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் குடிநீருக்கான நீரைப் பெற்றுக் கொள்வது இதன் நோக்கமாகும்.

இந்த நிலையில் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், நீர்மின் உற்பத்திக்கான சோதனை நிலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திட்ட இயக்குநர் பொறியாளர் டி.சி.எஸ்.ஏலகந்த தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய நல்லிணக்கத்தின் மூலமே தமிழர் எதிர்பார்ப்பு நிறைவேறும்

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 17

**தேசிய நல்லிணக்கத்தின் மூலமே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

90 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வைக் காண்பதற்கான பயணத்தை முன்னெடுத்து வருகின்றேன்.

இதன்மூலம் பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. குறிப்பாக, அறிவியல் நகரை விடுவித்து, பொறியியல் பீடத்தினை அங்கு உருவாக்குவதற்கு தேசிய நல்லிணக்கமே காரணமாக அமைந்திருந்தது.

அதேபோன்று எதிர்காலத்திலும் எமது பிரச்னைகளை தீர்ப்பதற்கும் ஒரு தேசிய நல்லிணக்கப் பொறிமுறையே நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும்.



இந்த யதார்த்தத்தினை புரிந்து கொண்டு யாழ்.பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினராகிய நீங்களும் உங்களுடைய முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (அ)



# சந்திரிகாவின் மனித நேய செயல்

கொழும்பு, ஏப். 17

தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏழை மக்களுடன் இணைந்து கொண்டாடியுள்ளார்.

கொழும்பு நகர வீதிகளில் உள்ள வறிய மக்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்களைக் கொடுத்து அவர்களுடன் புத்தாண்டைக் கழித்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனது முகநூல் பதிவில் புகைப்படங்களுடன் பகிர்ந்துள்ளார்.

இந்நிலையில், சந்திரிகாவின் இந்த மனித நேயச் செயலுக்கு பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். (அ)

# சிறுவர் அபிவிருத்தி நிலையம் தீக்கிரை!



கொழும்பு, ஏப். 17

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தை தோட்ட பிரிவில் தீப்பரவல் சம்பவம் ஒன்று நேற்று அதிகாலை 02 மணியலவில் இடம்பெற்றுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கந்தை தோட்டத்தில் இயங்கிய வரும் பிள்ளைகள் அபிவிருத்தி நிலையத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவல் மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டதா அல்லது யாரேனும் தீ வைத்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பிள்ளைகள் அபிவிருத்தி நிலையம் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு அருகில் காணப்படுகிறது.

தீ பரவல் இடம்பெற்ற சமயத்தில் பாரிய வெளிச்சமும் புகை நாற்றமும் வருவதை உணர்ந்த அருகில் வசிக்கும் மக்கள் வீட்டு விட்டு வெளியில் பதறிக்கொண்டு வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக தெரிவித்தனர்.

இந்த தீ பரவல் சம்பவத்தினால் பிள்ளைகள் அபிவிருத்தி நிலையத்தின் கூரைப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப கல்வி கற்கும் சிறார்களின் புத்தகங்கள்,உபகரணங்கள் பல தீயில் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எதிர்காலத்தில் நீர் விநியோகம் பெரும் சவால்!

கொழும்பு, ஏப். 17

எதிர்காலத்தில் நுகர்வோருக்கு நீர் விநியோகம் செய்வது மிகவும் கடினமாக இருக்கும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலைமை காரணமாக நீர் விரயத்தை குறைப்பதற்கான தொடர் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்த நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்கள் 'தண்ணீர் வழங்கல் வழங்குநர்களுக்கான நீர் வழங்கல் இணைப்பு வழிகாட்டுதல்கள்' என்ற தலைப்பில் உள்ளன.

மேலும் தற்போது நிலவும் நிதி நெருக்கடி காரணமாக, அனைத்து பொதுச் சேவை வழங்குநர்களுக்கும் புதிய திட்டங்களில் முதலீடு செய்வது அல்லது வசதிகளை மேம்படுத்துவது சவாலாக உள்ளது என்று அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தரமற்ற உணவுப் பொருட்கள் வழங்கல்

## பிரதிப் பணிப்பாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 17

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கணிசமான அளவு உலர் உணவுப் பொருட்கள் தரமற்றவை என வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

மேலும், சில சமயங்களில் நோயாளிகளின் உணவுக்காக வழங்கப்படும் காய்கறிகள் கிட்டத்தட்ட அழுகிய நிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் தேநீருக்கு பயன்படுத்தப்படும் மா மற்றும் சீனியும் காலாவதியான தாகவும் அவர் தெரிவித்தார்.

சில சமயங்களில் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனம் தொழிலாளர்களின் உணவுக்கு தகுதியற்ற மீன்களைக் கொண்டு உணவு வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து பல ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் ஆனால் சுகாதார அமைச்சினால் முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் வைத்தியசாலை அதிகாரிகளால் எதுவும் செய்ய முடியாது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு பல தடவை கடிதங்கள் மூலம் தெரியப்படுத்திய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைக்கு உணவு வழங்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனமே சிறைச்சாலைகள், இராணுவ முகாம்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் உணவு விநியோகம் செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

உலர் உணவுப் பொருட்களுக்கு மாதாந்தம் 76 மில்லியன் ரூபாவும் மீன்களுக்கு 15 மில்லியன் ரூபாவும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் என பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ)

# சுவிஸ் நாட்டு பெண்ணை ஏமாற்றினாரென யாழ். பொலிஸ் அலுவலர் மீது முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் பெண்ணை திருமணம் செய்வதாக கூறி சுமார் 50 இலட்ச ரூபாயை மோசடி செய்ததாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றார். அவருக்கு திருமணமாகி பிள்ளைகள் உள்ள நிலையில் சுவிஸ் நாட்டில் கணவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் குறித்த பெண் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, பெண்ணின் பூர்வீக சொத்துக்கள் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய சென்று இருந்தார்.

முறைப்பாடு செய்ய சென்ற நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த தமிழ் பொலிஸ் பொலிஸ் உத்தியோகத்தருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்த பழக்கம் பெண் வெளிநாடு சென்ற பின்னரும் தொடர்ந்து உள்ளது. ஒரு கட்டத்தில் அது காதலாக மலர்ந்துள்ளது. அதனை அடுத்து சுவிஸ் நாட்டு பெண், இங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு பணம், நகை என்பவற்றுடன் அன்பளிப்பு பொருட்கள் என பலவற்றை வழங்கி வந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் பொலிஸ் பொலிஸ் உத்தியோகத்தரை சுவிஸ் நாட்டுக்கு எடுப்பதற்கான முயற்சிகளையும் அப்பெண் மேற்கொண்டுள்ளார். அதற்கு பொலிஸ் பொலிஸ் உத்தியோகத்தர் மறுப்பு தெரிவித்து, தான் நாட்டை விட்டு வர மாட்டேன் என கூறியுள்ளார்.

அதனால் அப்பெண் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தன்னை திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியவேளை , அதற்கு அவர் உடன்படாத நிலையில், அது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார்.

அதனை அடுத்து, இப்பெண்ணிடம்இருந்து பெற்றுக்கொண்ட ஒரு தொகை நகை, பணம் என்பவற்றை மீள அளித்துள்ளார். மிகுதியை சிறு கால இடைவெளியில் மீள கையளிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

அதன் பிரகாரம் உரிய காலத்தில் மிகுதிப் பணம் நகையை மீள கையளிக்காததால், அப்பெண் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# உணவு பாதுகாப்பு ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காதோர் மீது நடவடிக்கை!

## சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ்



**அம்பாறை, ஏப். 17**

**நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.உவைஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக்கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வது உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதற்காகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காது அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக்கையாளும் நிறுவனங்களில் காணப்படுகின்ற சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு கடந்த சில தினங்களாக பொத்துவில் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. நேரடியாக உணவைக்கையாளும் நிறுவனங்களும் அதில் வேலை செய்பவர்களும் ஒரு மாத காலப் பகுதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும். அத்துடன் வேலை செய்பவர்கள் தமக்குரிய மருத்துவ சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சுகாதாரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உணவுகளாலும், பிழையான உணவுப் பழக்கத்தினாலுமே இன்று அதிகமானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகுகின்றனர். உணவுகளை கையாளும் மற்றும் அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பொது மக்களுக்கு சுகாதாரமான உணவுகளை வழங்கும் பொருட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)



# மட்டக்களப்பு மெதடிஸ் மாணவன் குருசாட் கராத்தே போட்டியில் ரஷ்யாவில் சாதனை!

மட்டக்களப்பு, ஏப். 17

மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்கும் மட்டக்களப்பைச் சேர்ந்த முருகேந்திரன் குருசாட் ரஷ்யாவின் நோவோசோபிறிக்ஸ் நகரில் இடம்பெற்ற காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டி இலங்கைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் நடைபெற்ற போட்டியிலும் இம் மாணவன் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

இவர் கராத்தே போதனாசிரியர்களான எந்திரி.எஸ். முருகேந்திரன் , இராஜலட்சுமி தம்பதிகளின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காரைதீவில் கலாசார விளையாட்டு விழா!

காரைதீவு, ஏப். 17

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது வருட நிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 26 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் றொட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற இருக்கும் கலாச்சார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்.

சீர்பெறு அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளரும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளருமான எந்திரி என் .சிவலிங்கம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் , கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களப்பணிப்பாளர் யு. சிவராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதன்மை அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் ஏனைய சிறப்பு நட்சத்திர கௌரவ அதிதிகள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இந்த நிகழ்வில் விசேடமாக காரைதீவு விளையாட்டு கழகத்தின் 40 வருடகால வரலாற்றை உள்ளடக்கிய ”விபுலவிருட்சம்” என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட இருக்கின்றது. அத்துடன் கல்வித்துறை சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள் என்று கழக செயலாளர் எஸ்.கிரிசாந்த் தெரிவித்தார். (அ)

# மின்சார வேலிகளின் பராமரிப்பு குறித்து உள்ளூர் சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டல்



அம்பாறை, ஏப். 17

அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பண்டாரதுவ கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியுடன் மின்சார வேலிகளை திறம்பட பராமரிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடைபெற்றது.

பண்டாரதுவ கிராமம் காட்டு யானைகளின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் நடவடிக்கைகள் வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஹெல்ப் ஸ்ரீலங்கா ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலை அமர்வில் குடிமைப் பாதுகாப்புத் துறையின் காவலர்களால் நடத்தப்பட்ட பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்,

அதனைத் தொடர்ந்து கிராம விவசாயி அமைப்புகளின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி இடம் பெற்றதுடன், நல்லிணக்கத்துடன் வாழ்வது மற்றும் மனித யானைகள் அமைதி என்ற தலைப்பில் வீடு வீடாக பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது.

# பட்டிருப்பு கல்விப் பணிப்பாளராக புவனேந்திரன் இன்று பதவியேற்பு!

காரைதீவு, ஏப். 17

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரான செல்லத்துரை புவனேந்திரன் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக( மேலதிக) நேற்று செவ்வாய்க்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏலவே பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராகவிருந்த ரி.சிறிதரனுக்கு எதிராக அண்மைக் காலமாக அங்கு தொடர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தமை தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து அவர் திருகோணமலையில் உள்ள



கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இணைக்கப்பட்டுள்ளார்.

கல்முனை வலய கல்விப் பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றி கொண்டு வந்தவேளை அக்கடமைக்கு மேலதிகமாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று செவ்வாய்க்கிழமை தனது கடமையை பொறுப்பேற்றார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்1 அதிகாரியான புவனேந்திரனுக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டது.

(அ)

# கர்ப்பவதிகளுக்கு பொருட்கள்



அம்பாறை, ஏப். 17

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டீ.வீரசிங்கவின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள புது வருடத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான குழந்தைகளுக்கான பொருள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அம்பாறையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருள்கள் வழங்கினார். (அ)

# இதுவரை எவருமே பயன்படுத்தாத ஆயுதங்களை கையிலெடுப்போம்!


## இஸ்ரேலை மிரட்டுகிறது ஈரான்

தெஹ்ரான், ஏப். 17

இன்னொரு முறை இஸ்ரேல் தங்களைத் தாக்கினால் இதுவரை யாருமே பயன்படுத்தாத ஆயுதத்தை கையில் எடுப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

முன்னதாக நேற்று முன் தினம் இஸ்ரேல் ராணுவத் தலைவர் ஹெர்ஸி ஹலேவி அளித்த பேட்டியில்,

“ஈரானின் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்போம். பிரதமர் நெதன்யாகுவின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம்” என்று கூறியிருந்தார்.



இதற்குப் பதிலளித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி பகேரி, “இன்னொரு முறை இஸ்ரேல் எங்களைத் தாக்கினால், நொடிகளில் பதிலடி கொடுக்கப்படும். அதுவும் இதுவரை பயன்படுத்தப்படாத ஆயுதங்களை உபயோகிப்போம்” என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலின் சனல் 12 செய்தியின்படி, ஈரானுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் ஆனால் அது முழுமையான போருக்கு வித்திட்டுவிடக் கூடாது என்ற வகையில் போர் விவகாரங்கள் அமைச்சகம் ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஞாயிறு காலை சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசியது. சுமார் 5 மணி நேரம் நடந்த இந்தத் தாக்குதலில் 99 சதவீதத்தை நடுவானில் இடைமறித்து அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் படைகள் அழித்தன.

இஸ்ரேல் மீது ஈரான் ஏவிய ட்ரோன்களில் 80-ஐ அமெரிக்கா வீழ்த்தியது. ஈரான், ஏமனில் இருந்து ஏவப்பட்ட 6 ஏவுகணைகளை வீழ்த்தியது. இந்த தாக்குதல் 3-ம் உலகம் போருக்கு வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

“மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு போரை தாங்காது. அமைதியை நிலைநாட்டும் கூட்டுப் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது” என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் கவலை தெரிவித்துள்ளார். (அ)



# ஓமானில் கன மழை 17 பேர் உயிரிழப்பு!

மஸ்கட், ஏப். 17

ஓமானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பெய்த கனமழையால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக 17 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.


இந்நிலையில், ஓமனின் பல பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களை மூட ஓமன் அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், அடுத்த சில தினங்களில் நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கடும் மழை காரணமாக பல கார்கள் மற்றும் உடைமைகள் சேதமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ)

# பெருமளவு சிறுவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்தேன்

## அவர்களில் பலர் ஆறுவயதிற்கு உட்பட்டவர்கள் காசாவிலிருந்து திரும்பிய பிரிட்டிஸ் மருத்துவர்



லண்டன், ஏப். 17

சமீபத்தில் காசாவிலிருந்து திரும்பிய பிரிட்டனை சேர்ந்த மருத்துவர் ஒருவர் தான் யுத்தத்தினால் காயமடைந்த பெருமளவு சிறுவர்களுக்கு சத்திரகிசிச்சை செய்ததாக தெரிவித்துள்ளார்.

காயமடைந்த பெருமளவு சிறுவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்தேன். அந்த எண்ணிக்கை என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது என மருத்துவர் விக்டோரியா ரோஸ் தெரிவித்துள்ளார்.

16 வயதிற்கு உட்பட்ட பலருக்கு சத்திர சிகிச்சை செய்ததாக தெரிவித்துள்ள அவர், அவர்களில் பலர் ஆறு வயதிற்கு உட்பட்டவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டு காயங்கள், எரிகாயங்கள், ஏனைய காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

போதிய உணவு இன்மையால் காசாவில் காயமடைந்தவர்களின் காயங்கள் குணமாவது பிரச்னைக்குரிய விடயமாக காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ள அவர், காசாவில் மருத்துவப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை என்னை விட வயது கூடிய ஒருவருக்கு மாத்திரமே (வயது-53) சத்திர கிசிச்சை செய்தேன். ஏனையவர்கள் அனைவரும் என்னை விட வயது குறைந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளார். (அ)

# 20 சிதைந்த சடலங்களுடன் பிரேசிலில் ஒதுங்கிய படகு!



பிரேசிலியா, ஏப். 17

பிரேசிலின் பாரா மாநிலத்தில் இருந்து 185 மைல் தொலைவில் கரை ஒதுங்கிய சிறிய படகில் பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி சுமார் 20 சிதைந்த சடலங்கள் இருந்ததாகவும், எனினும் அங்குள்ள மொத்த சடலங்களின் எண்ணிக்கையை வெளியிட முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் சட்டமாஜெனரல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், படகு எந்தப் பகுதியில் இருந்து வந்தது என்பது இதுவரை வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் குற்றவியல் மற்றும் சிவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சட்டமா அதிபர் அலுவலகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி பிரேசில் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டில், இறந்த உடல்களுடன் குறைந்தது ஏழு படகுகள் பிரேசில் மற்றும் கிழக்கு கரீபியனுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சிங்கப்பூர் பிரதமர் இராஜினாமா!



சிங்கப்பூர் சிற்றி, ஏப். 17

சிங்கப்பூரில் பிரதமர் லீ சியென் லூங், எதிர்வரும் 15 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் பிரதமர் லீ சியென் லூங் (வயது 72) தலைமையிலான மக்கள் செயல் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது.

நாட்டின் 3 ஆவது பிரதமரான இவர் கடந்த 2004 முதல் மக்கள் செயல் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்து வருகிறார்.

சமீப காலமாக இந்த கட்சியின் அமைச்சர் மற்றும் எம்.பி.க்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதன் காரணமாக 2 எம்.பி.க்கள் தங்களது பதவியை இராஜினாமா செய்தனர்.

இந்தநிலையில் பிரதமர் லீ சியென்னும் அடுத்த மாதம் (மே) 15 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். மேலும் தான் பதவி விலகும் அதேநாளில் லாரன்ஸ் வோங் பிரதமராக பதவியேற்பார் எனவும் அவர் கூறி உள்ளார். (அ)

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படமாட்டார் ரோட்ரிக்கோ

மணிலா, ஏப். 17

பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிக்கோ டுட்டர்டேயை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் (ஐ.சி.சி) தாம் ஒப்படைக்கப்போவதில்லை என அந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி பெர்டினண்ட் மார்கோஸ் ஜூனியர் தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி டுட்டார்டே அவரது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை நடத்தி வருகிறது.

அவர் 2016ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதாகவும், அந்நடவடிக்கைகள் தற்போதைய ஜனாதிபதி மார்கோசின் ஆட்சிக் காலத்திலும் தொடர்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நமக்கு அனுப்பும் கைதாணையை தாம் அங்கீகரிக்கப்போவதில்லை என தற்போதைய ஜனாதிபதி மார்க்கோஸ் தெரிவித்துள்ளார். (அ)

# சஜித் தரப்பின் 17 எம்.பிக்களை வளைத்துப்போடுவது தாமதம்!

## மே தினத்தில் மேடையேற்றுவது சாத்தியமில்லை

கொழும்பு, ஏப். 17

**ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 17 பாராளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் வளைத்துபோடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி இன்னும் வெற்றியளிக்க வில்லை என தெரியவருகின்றது.**

குறித்த நபர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினத் துக்கு மேடையேற்றும் நோக்கிலேயே நகர்வுகள் முன்னெடுக் கப்பட்டுவந்தன. எனினும், ஒரிருவர் மாத்திரமே ஜனாதிபதி ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

எதிரணியில் இருந்து ஆதரவு வழங்கும் உறுப்பினர்களை கூடியவிரைவில் விளைத்துப்போடு மாறு ஜனாதிபதித் தேர்தலுக் காக ஐக்கிய தேசியக் கட்சியால் தெரிவு செய்யப்பட்டுள்ள நிறு வனம் ஆலோசனை வழங்கியுள் ளது எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் எதிரணி உறுப் பினர்களின் ஆதரவை பெறும் முயற்சியில் வஜிர அபேவர்தன, சாகல ரத்னாயக்க, ரவி கருணா நாயக்க ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் விஜயதாஸ விரைவில் தீர்மானம்



கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடு வதா இல்லையா என்பது குறித்து அடுத்த சில வாரங்களில் தீர்மா னம் எடுப்பதாக நம்புவதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப் பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை பிரதிநிதித்துவப்படுத் தும் பெரும்பான்மையான மக் கள் இது தொடர்பில் தன்னி டம் கோரிக்கை விடுத்துள்ள தாக அவர் தெரிவித்தார்.

மேலும் மகா சங்கத்தினரும் ஏனைய சமயத் தலைவர்களும் தன்னிடம் இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளதால், அது தொடர்பில் மேலும் சிந் தித்து முடிவெடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)



# சாமர சம்பத் தசநாயக்கவின் வாகனம் திடீரென தீ பற்றியது

கொழும்பு, ஏப். 17

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் கார் திடீ ரென தீப்பிடித்துள்ளதாக தெரி விக்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்று அதி காலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சர் மஹி யங்கனையிலிருந்து எல்ல பிரதே சத்துக்கு சென்று கொண்டிருந்த போதே பண்டாரவளை ஹல்பே பகுதியில் வாகனம் திடீரென தீப்பிடித்துள்ளது.

எனினும், இந்த தீ விபத்தில் அமைச்சருக்கோ, சாரதிக்கோ காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பண்டாரவளை மாந கரசபையின் தீயணைப்புப் பிரி வினர், எல்ல பொலிஸார் மற் றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக் கது. (அ)

பொதுப் போக்குவரத்துச் சேவையில்

# சாரதிகளிடம் போதைப்பொருள் கண்டறிவதற்கு வேலைத்திட்டம்!

கொழும்பு, ஏப். 17

பொதுப் போக்குவரத்துச் சேவையின் சாரதிகள் வாகனம் செலுத்தும்போது போதைப் பொருட்களைப் பயன்படுத்தி னார்களா என்பதைக் கண்டறி யும் வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக தேசிய அபா யகரமான மருந்துக் கட்டுப்பாட் டுச் சபையின் விஞ்ஞான விவ கார உதவிப் பணிப்பாளர் ரஞ் சித் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பஸ் சாரதிகள் போதைப் பொருள் பாவனை செய்வது தொடர்பில் ஆராயுமாறு தனி யார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் விடுத்த கோரிக்கையின் அடிப்படை யில் போக்குவரத்து அமைச்சு, தேசிய ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு என்பன இணைந்து இது தொடர்பான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத் தவுள்ளன.

முதற்கட்ட நடவடிக்கை யாக மேல் மாகாணத்தில் மேற் கொள்ளப்பட்ட அவதானிப்புக ளில் கணிசமான அளவு போதைப் பொருள் பயன்படுத்தப்பட்டுள் ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

சாரதிகள் இரவு மற்றும் பிற் பகல் வேளைகளில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடு வது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தாகவும், எதிர்காலத்தில் இதனை ஒழுங்குபடுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு ஒழுங் குமுறைகளை தயாரித்து வருவ தாகவும் ரஞ்சித் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (அ)

# 6 அலுவலக ரயில்கள் ரத்து

கொழும்பு, ஏப். 17

6 அலுவலக ரயில்கள் நேற் றுச் செவ்வாய்க்கிழமை ரத்து செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

ரயில் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறையால் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கிராமங் களுக்குச் சென்ற மக்கள் பணி யிடங்களுக்குத் திரும்புவதற் காக நேற்றும் கூடுதலான ரயில் சேவைகள் இடம்பெற்றன.

மேலும் புத்தாண்டுக்காக கிராமங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்கு வருவ தற்காக கடந்த 14ஆம் திகதி முதல் மேலதிக ரயில் சேவை கள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏற்றுமதித் தடையை நீக்கியது இந்தியா வெங்காயம் விலை குறையும் சாத்தியம்

கொழும்பு, ஏப். 17

பெரிய வெங்காய ஏற்றும தி க்கு இந்தியா விதித்திருந்த தடை இலங்கைக்கு மாத்திரம் உத்தியோகபூர்வமாக நீக்கப் பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள் ளது.

அதிகபட்சமாக 10,000 மெற் றிக் தொன் வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வ தற்கான வாய்ப்பு இந்திய ஏற்று மதியாளர்களுக்கு கிடைக்கும் என இந்திய தூதரகம் தெரிவித் துள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான ஒத்துழைப்பின் கீழ் பண்டிகை காலத்தை முன்னிட்டு வெங்காயத்திற்கான ஏற்றுமதி தடை நீக்கப்பட்டுள் ளது. (அ)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 17

அத்திமலே, கொட்டியாகல பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரே மின் னல் தாக்கி உயிரிழந்தார் என பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் பதிவாகியுள் ளது.

உயிரிழந்தவர் 65 வயது டைய கெகெலான, கொட்டி யாகல பிரதேசத்தைச் சேர்ந்த வராவார்.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை அத்தி மலே பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (அ)

# கோழி இறைச்சி விலை குறையும்?

கொழும்பு, ஏப். 17

பண்டிகைக்காலத்தில் அதி கரித்துக் காணப்பட்ட கோழி இறைச்சியின் விலை எதிர்வரும் நாட்களில் குறைவடையும் என கோழி இறைச்சி உற்பத்தியாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிக கேள்வி காரணமாக, பல இடங்களில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1,500 ரூபாய் வரை விற்பனை செய் யப்பட்டதாக நுகர்வோர் குற் றஞ்சாட்டியிருந்தனர்.

இந்தநிலையில், தற்போது கோழி இறைச்சியின் கேள்வி குறைந்துள்ள நிலையில், கோழி இறைச்சியின் விலை குறைவ டையும் என கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் தெரிவித் துள்ளனர். (அ)

# மீன்பிடித் தடைக் காலம் இலங்கையிலும் வேண்டும்

கடற்றொழிலாளர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 17

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் மீன்பிடித் தடைக்காலத்தை அமுல்ப்படு த்த வேண்டும் என கடற்றொழி லாளர் சங்கம் வலியுறுத்தியுள் ளது.

நேற்று முன் தினம் முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை, மீன்பிடித் தடைக் காலம் இந்தியாவில் அமுல்ப்ப டுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை யில் அந்த நடைமுறை பின்பற் றப்படாமை குறித்து, அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவிக்கையில், கடந்த 3 வருடங்களாக இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், எந்தவொரு அரசாங்கமும் அதனை நடைமு றைப்படுத்தவில்லை என குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, யுத்தத்திற்கு பின்னர் வடக்கு கடற்பரப்பில் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டுத் திணைக்க ளத்தினால் எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்தார். (அ)

## சஜித் அணியின்...

சார்பில் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி பின்பற்றுவதில்லை என்று தெரிவித்த ரங்கே பண்டார கொடஹேவாவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப் போகின்றனதா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப் போகின்றதா என்பதை தீர்மானிக்குமாறும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் அவர் கூறியுள்ளார். (ஐ)

## தேர்தலை...

அவர் வெற்றி பெற்றதால் தமிழர்கள் மிக மோசமான துன்பங்களை அனுபவித்தார்கள்.

தமிழர்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டாம். ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் - பிரதானமாகப் பேசப்படும் அநுரகுமார திஸநாயக்க, சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மூவரும் தமிழர்களுக்கு எதையும் வழங்கக்கூடிய எண்ணம் உடையவர்களாகக் காணப்படவில்லை.

கடந்த 75 ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இன்று நாங்கள் சிங்கள வேட்பாளர்களை நம்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவாக சிந்தித்து முடிவை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

எனவும் ஜனாதிபதி வேட்பாளரை தான் நியமிப்பதன் மூலம் வேட்பாளராகும் எதிர்ப் பார்ப்புடன் இருப்பவர்களுக்கு தன்னுடன் மனஸ்தாபம் உண்டாவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமுனவின் மத்திய குழு உறுப்பினர்களே பொருத்தமான வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ச தெரித்துள்ளார். (அ)

## தமிழ் அரசின்...

வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக வழக்கு விடயங்களை கையாள்வது தொடர்பில் ஏகோபித்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு முனைவதாக கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கட்சியின் சிரேஷ்ட தலைவர் சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் மற்றும் வட மாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இது வரை தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பில் எதிர்மறையாக கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேநேரம், சிவஞானம் சிறிதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுவேட்பாளர் விடயத்தை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், கட்சியின் தலைவரோ செயலாளரோ இது தொடர்பில் எவ்விதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை. இவ்வாறான பின்னணியிலேயே கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

மேலும், எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று மட்டக்களப்பில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் அந்த மாவட்டத்தினைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்பதில் சந்தேகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ)

# இளைஞனை தாக்கிய பொலிஸாருக்கு 24 ஆம் திகதி வரை விளக்கமறியல்

மதவாச்சி, ஏப். 17

தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மதவாச்சி பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இளைஞனின் விதைப்பையை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்று மதவாச்சி நீதிவான் நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டது.

இந்த வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதி மீளப் பரிசீலிக்குமாறும், சந்தேக நபர்களை அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மதவாச்சி நீதிவான் இமேஷா மதுபானி தர்மதாச உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்புமாறும் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞன் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சத்திர சிகிச்சை மூலம் அவரது ஒரு விதைப்பை அகற்றப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று மதவாச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கில் சுயாதீன கண்காணிப்புக் குழுவாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இலங்கையில் இன்று முதல் புதிய வீசா நடைமுறை

கொழும்பு, ஏப். 17

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புதிய வீசா முறையொன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய இணைய வழிமுறையைச் செயல்படுத்தும் பணியை இன்று முதல் ஆரம்பிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜே. இலுக்பிட்டிய அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ)

## தாய் மகளை...

கூறப்படுகின்றது.

காயமடைந்த பெண்கள் இருவரும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(முன்னர் வந்த செய்தி பக்கம் 5இல்)

## சர்வோதயம்...

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் காலமானார்.

1931 நவம்பர் 5ஆம் திகதி காலி மாவட்டத்தின் உனவடுன பிரதேசத்தில் பிறந்த ஆரியரத்ன இலங்கை அரசியலிலும் சமூக அபிவிருத்தியிலும் தொடர்ச்சியான செயல்பாட்டாளராக விளங்கினார்.

1958ஆம் ஆண்டு சர்வோதயம் அமைப்பை நிறுவி நாடு முழுவதும் பரவச் செய்தார். 60 ஆண்டுகளுக்கு மேலாக அரச சார்பற்ற இந்த அமைப்பு இயங்கி வருகிறது.

ஆரியரத்னவுக்கு நாட்டின் உயர் விருதான சிறிலங்காபிமானய விருது 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஹஜ் யாத்திரிகர்கள் ஒதுக்கீடு;

# பாதிக்கப்பட்ட முகவரை இணைக்குமாறு தீர்ப்பு!

கொழும்பு, ஏப். 17

2024 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திகர்களுக்கான ஒதுக்கீடுகளை இடைநிறுத்தவும், முறையான ஒதுக்கீட்டால் பாதிக்கப்பட்ட பயண முகவரை இணைக்கவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் சவூதி அரேபிய அரசாங்கம் யாத்திரிகர்களின் வருகையை நிர்வகிப்பதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் ஒதுக்கீட்டை ஒதுக்குகிறது.

இந்த ஆண்டு இலங்கைக்கு 3,500 யாத்திரிகர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். இது வெவ்வேறு பயண முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பயண முகவர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஹஜ் குழு தனது பயண உரிமத்தை இரண்டு ஆண்டுகளுக்கு தன்னிச்சையாக ரத்து செய்ததாக பயண முகவர் குற்றம் சாட்டினார்.

மனுதாரர் யுனைற்றட் டிராவல்ஸ் தனது மனுவில், இரண்டு ஆண்டுகளுக்கு தனது உரிமத்தை இடைநீக்கம் செய்வதற்கான குழுவின் முடிவு பிணைய காரணங்களுக்காக செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான பயண இயக்குனராக தன்னைப் பதிவு செய்யுமாறும், டிசெம்பர் 2023 இல் செய்யப்பட்ட ஒதுக்கீட்டை இடைநிறுத்துமாறும் மனுதாரர் கோரினார்.

நீதிபதி டி.என். சமரகோன் தனது உத்தரவில், யுனைற்றட் ட்ராவல்ஸின் பயண இயக்குநராக பதிவு செய்யவும், மனுதாரர் நிறுவனத்தை சேர்க்காத ஹஜ் குழுவின் முந்தைய ஒதுக்கீட்டை நிறுத்தி வைக்கவும் உத்தரவிட்டார். (ஐ)

## இலங்கையின்...

இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நேற்று முன் தினம் ஆரம்பமான சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அரையாண்டு மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமையிலிருந்து முன்னேறுவதற்காக சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் நாணய நிதிய பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கை அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது எக்ஸ் தளத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இலங்கை அடைந்த வெற்றியை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியதாக அமைச்சரின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்திய சமூக - பொருளாதார முன்னேற்றங்கள், நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாரிய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் திட்டங்களை தொடர்வதற்கான இலங்கை அதிகாரிகளின் அர்ப்பணிப்பு தொடர்பில் அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

இதேவேளை, ஷெஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ண மூர்த்தி சுப்ரமணியனையும் சந்தித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணைக்கான மீளாய்வுகளை நிறைவு செய்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயரையும் அரையாண்டு மாநாட்டின்போது சந்தித்து கலந்துரையாடியதாக ஷெஹான் சேமசிங்க எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியின் உள்ளக மறுசீரமைப்புகளும் மாற்றங்களும் இலங்கை போன்ற நாடுகளுக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பது குறித்து பரமேஸ்வரன் ஐயர் விளக்கமளித்ததுடன், இலங்கைக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட குழுவினர் சர்வதேச புரிந்துணர்விற்கான பொருளாதார பேரவையின் கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

## பாலித...

யில் உயிரிழந்தார் என்று அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

பாலித தேவரப்பெரும ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வன வளங்கள் இராஜாங்க அமைச்சரும் ஆவார். (எ)

## சிவராத்திரி...

என்றும் தெரிவித்தோம். எனினும், நாங்கள் அதனை எரித்தமைக்கான எந்த ஆதாரங்களும் சமர்ப் பிக்கபடவில்லை. அவர்க ளின் கருத்துகளிலும் முரண்பாடு காணப்பட் டது.

அத்துடன், தீ மூட் டியதாக அவர்கள் காட் டிய புகைப்படம் முதல் நாள் இரவில் அங்கு காவல் கடமையில் இருந்த நெடுங்கேணி பொலிஸார் கொளுத்திய தற்கான சான்று களை நாம் வெளிப்படுத்தியிருந்தோம். அந்தப் புகைப்படத்தையே இன்றையதினம் (நேற்று) அவர்கள் இங்கு சமர்ப்பித்திருந்தார்கள். இது முற்றிலும் பொய்யானது. இதனை நாம் சுட்டிக் காட்டினோம் - என்றார்.

இதேவேளை, விசாரணை தொடர்ச்சியாக நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. நெடுங்கேணி பொலிஸார், வனவளத் திணைக்களத்தினர் அழைக் கப்படவுள்ளனர் என்று மனித உரிமை கள் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu

# பொதுவேட்பாளர் தொடர்பில் மீண்டும் பேச்சு நடத்தப்படும்!

## தேர்தலை புறக்கணிப்பதால் பயனில்லை என்கிறார் சி.வி.

கொழும்பு, ஏப். 17

**தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் வடக்கு, கிழக்கு அரசியல், சிவில் அமைப்புக்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்தலைப்புறக்கணிப்பதால் பயனில்லை என்றும் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

70 ஆண்டுகளாக தென்னிலங்கை தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் வாக்களித்து வந்துள்ள போதும் தற்போது வரையில் ஏமாற்றமே எஞ்சுவதாக உள்ளது. ஆகவே தான் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான முடிவுகளை நாம் எடுப்பதற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எமக்கு முன்னால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதற்கான தெரிவொன்று முன்மொழியப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவால் எவ்விதமான பயனுமில்லை. காரணம் பிற கட்சிகள் தலையீடுகளைச் செய்து தமிழ் மக்களின் வாக்குகளை தம்வசப்படுத்துவதற்கே முயற்சிகளை எடுக்கும். ஆகவே ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதை விடவும் எமது மக்கள் சார்பில் ஒரு வேட்பாளரை களமிறக்குவதே பொருத்தமானதாகும்.

குறிப்பாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதால் தேர்தலில் வெற்றி பெறமுடியாது விட்டாலும் தமிழ் மக்கள் எதற்காக இவ்விதமான முயற்சியை எடுக்கின்றார்கள் என்பதை அனைத்து தரப்புக்களுக்கும் உணர்த்தக்கூடியதாக இருக்கும்.




அதாவது, சிங்களத் தலைவர்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றமை தமிழ் மக்களுக்கு பிரச்னைகள் காணப்படுகின்றமை உள்ளிட்ட பல விடயங்களை வெளிப்படுத்த முடியும். அதுமட்டுமன்றி தென்னிலங்கையில் உள்ள தலைவர்கள் தமிழ் மக்களின் வாக்குகள் இன்றி பெரும்பான்மையை பெறுவது கடினம் என்பதையும் உணர்த்த முடியும்.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் நாட்களில் நாம் வடக்கு-கிழக்கு அரசியல் சிவில் தலைவர்களைச் சந்தித்து மீண்டும் கலந்துரையாடல்களைச் செய்யவுள்ளோம். அந்தக் கலந்துரையாடல் மூலமாக பொது நிலைப்பாடொன்றுக்கு வரவுள்ளோம்.

இதேவேளை பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவதாக இருந்தால் யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பிலும் தேர்தல் பிரசாரம் வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கையாள்வதற்கு தனித்தனியாக குழுக்கள் அமைப்பதற்கும் பரிந்துரைக்கப்படவுள்ளது-என்றார். (அ)

# விக்னேஸ்வரனிடம் அவகாசம் கோரினார் வேலன் சுவாமிகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளரை களமிறக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் தவத்திரு வேலன் சுவாமிகளை வேட்பாளராக களமிறங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், விடுத்த கோரிக்கை தொடர்பில் பதிலளிப்பதற்கு கால அவகாசம் கோரியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளராக களமிறக்குமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன தவத்திரு வேலன் சுவாமிகளை தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

எனினும் அரசியல் செயற்பாடுகளில் கட்சி சார்ந்து தான் செயற்படுவதற்கு விரும்பவில்லை என்று வேலன் சுவாமிகள் பதிலளித்துள்ளார்.

இருப்பினும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் கூட்டிணைந்து பொதுவேட்பாளர் விடயத்தில் செயற்படுவதற்குரிய சாத்தியமான நிலைமைகள் இருப்பதால் தாங்கள் (வேலன் சுவாமிகள்) கட்சி சார்ந்த நபாராக அடையாளப்படுத்த மாட்டீர்கள் என்று சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இதனையடுத்து குறித்த விடயம் சம்பந்தமாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு சிலநாட்கள் கால அவகாசம் அளிக்குமாறு கோரிக்கை விடுத்துள் ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு பொதுத் தேர்தல் சாத்தியமற்றது!

## சுட்டிக்காட்டுகிறார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை பெறுவதற்கான முயற்சி வெற்றியளிக்காது என தான் நம்புகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ அரசமைப்பினர் பிரகாரம் செப்ரெம்பர், ஒக்ரோபர் இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி நினைத்தால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்தலாம்.

அவ்வாறு இல்லாவிட்டால் 113 எம்.பிக்கள் இணைந்து யோசனையொன்றை வழங்கினால் முன்கூட்டியே பொதுத்தேர்தலை நடத்தலாம். இது சவாலுக்குரிய விடயம். எனவே, அந்த முயற்சி கைகூடாது என்றே கருதுகின்றேன்.

அதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டு கட்சி ஐக்கியமாகவே முடிவெடுக்க வேண்டும். கட்சி எடுக்கும் முடிவுக்கு நான் கட்டுப்படுவேன்.”- என்றார் எஸ்.பி. திஸாநாயக்க. (அ)

# முக்கிய அரச நிறுவனங்களை விற்பனை செய்ய அரசு முயற்சி

## முன்னிலை சோசலிச கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 17

நாட்டின் முக்கியமான அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக முன்னிலை சோசலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் கல்விச் செயலளார் புபுது ஜாகொட இந்த குற்றச்சாட்டைச் முன்வைத்துள்ளார்.

புத்தாண்டில் அரசாங்கம் முதல் பணியாக அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்யும் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தாண்டுக்கு முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை மின்சாரசபையை பல துண்டுகளாக பிளவாக்கி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச வங்கிகளை விற்பனை செய்யவும், அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களுக்கு சலுகைகளை வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன கூட்டாக இணைந்து அரச வங்கிகள் குறித்து எடுத்துள்ள தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இலவச கல்வி முறைமையை இல்லாதொழிக்கும் நோக்கில் கொதலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பணம் செலுத்தி மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் பிரதான சொத்துக்களில் ஒன்றான மின்சார வசதி, வங்கிக் கட்டமைப்பு மற்றும் இலவச கல்வி என்பனவற்றை கொள்ளையிட்டே அரசாங்கம் புத்தாண்டை ஆரம்பிக்கின்றது-என்றார். (அ)

# வாகனங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை!

கொழும்பு, ஏப். 17

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கையின் பொருளாதாரம் இன்னும் நல்ல நிலையில் இல்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைகள் பிரிவின் பேராசிரியர் பிரியந்த துனுசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணத்தினால் நாட்டின் பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் தான் இருப்பதாகவும் அவர் சுட்டக்காட்டினார்.

விண்ணக வாழ்வில் ஆண்டுகள் முப்பத்திரெண்டு



அமரர் செபமாலைமுத்து பீற்றர் திசநாயகம்
மலர்வு 29.06.1931 உதிர்வு 17.04.1992

“உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்”

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
எம்மோடு வாழ்ந்து வழிகாட்டி
உறவுகளை பரிவுடன் நேசித்து
அவர் தம் இன்னல்களில் துடுப்பாய்
நின்று மனங்களை வென்றெடுத்தீரே
மனுமகன் மரித்தநாளில் மண்ணுலக
வாழ்வை முடித்துக் கொண்டீரே
காலங்கள் கடந்தாலும் நின் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் வாழும்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
பிரார்த்திக்கும் மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,மைத்துனி,
பூட்டப்பிள்ளைகள்,உறவினர்கள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சன்ரைசர்ஸ் புதிய சாதனை

# இமாலய இலக்கை விரட்டி போராடி தோற்றது ஆர். சி. பி.




பெங்களூரு, ஏப். 17

287 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது ஆர். சி. பி. அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 30 ஆவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் விளையாடின. இதில் எஸ். ஆர். எச். அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆர். சி. பி. அணிக்காக ஒற்றை ஆளாக களத்தில் வெற்றிக்காகப் போராடியிருந்தார் தினேஷ் கார்த்திக்.

பெங்களூரு எம்.சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற ஆர். சி. பி. பந்து வீச்சை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 287 ஓட்டங்கள் குவித்தது. ட்ராவிஸ் ஹெட் சதம் விளாசினார். கிளாசன் அரைச்சதம் கடந்தார். அபிஷேக் சர்மா, எய்டன் மார்க்ரம், அப்துல் சமாத் ஆகியோர் 30 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர். பெர்குசன் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

288 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை விரட்டியது ஆர். சி. பி. அணி. விராட் கோலி மற்றும் அணித் தலைவர் டூப்ளசி இணைந்து முதல் விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் எடுத்தனர். கோலி 20 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்து மயங்க் மார்க்கண்டே சுழலில் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார்.

ரஜத் பட்டிதார், டூப்ளசி, சவுரவ் சவுகான் ஆகியோர் அடுத்தடுத்து சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர். பின்னர் லோம்ரோர் மற்றும் தினேஷ் கார்த்திக் இணைந்து 59 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். லோம்ரோரை 19 ஓட்டங்களில் வெளியேற்றினார் கம்மின்ஸ்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தினேஷ் கார்த்திக், 35 பந்துகளில் 83 ஓட்டங்கள் விளாசினார். 5 பௌண்ட்ரிகள் மற்றும் 7 சிக்ஸர்கள் அவரது இன்னிங்ஸில் அடங்கும். ஆர். சி. பி. அணிக்காக தனி ஒருவனாக களத்தில் செயல்பட்டார் டி.கே. 19 ஆவது ஓவரில் அவரை ஆட்டமிழக்கச் செய்தார் நடராஜன்.

இறுதியில் 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 262 ஓட்டங்கள் எடுத்தது ஆர். சி. பி. அணி. இதன் மூலம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

(எ)

# “முயற்சித்தோம் முடியவில்லை”

## ஆர். சி. பி. அணித் தலைவர் டூப்ளசி

பெங்களூரு, ஏப். 17

இயன்றவரை இலக்கை நெருங்கிச் செல்ல முயற்சித்தோம். ஆனால், 288 ஓட்டங்களை 120 பந்துகளில் எட்டுவது கடினமானது. - இவ்வாறு கூறியுள்ளார் ஆர். சி. பி. அணித் தலைவர் டூப்ளசி.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் 288 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டி, 262 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு. இந்நிலையில், தோல்விக்குப் பிறகு டூப்ளசி கூறுகையில்:

சிறந்த துடுப்பாட்ட செயல்திறனை நாங்கள் வெளிப்படுத்தினோம். இயன்றவரை வெற்றி இலக்கை நெருங்கிச் செல்ல முயற்சித்தோம். ஆனால், 288 ஓட்டங்களை எட்டுவது கடினமானது. சில விஷயங்களை முயற்சி செய்து பார்த்தோம். எமது அணி வேகப்பந்து வீச்சாளர்கள் சிரமப்பட்டனர். துடுப்பாட்டத்திலும் சில இடங்களில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பவர் பிளே ஓவர்கள் முடிந்த பிறகும் ஓட்ட சராசரி சரிவு கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். அணியின் வீரர்கள் இலக்கைத் துரத்திய போது தடுமாறினர். 30 - 40 ஓட்டங்கள் கூடுதலாகக் கொடுத்துவிட்டோம் - என்றார் டூப்ளசி. (எ)




# ஐ. பி. எல். இல் ஆர். சி. பி. மோசமான சாதனைகள்

பெங்களூரு, ஏப். 17

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் வரலாற்றில் ஆர். சி. பி. அணி மோசமான இரண்டு சாதனைகளைப் படைத்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு சீசனில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிராக 49 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழந்தது ஆர். சி. பி. இதன் மூலம் ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் மிகவும் குறைந்த ஓட்டங்களை எடுத்த அணியாக ஆர். சி. பி. அறியப்படுகிறது. இதேவேளை, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிராக நடப்பு சீசனில் 287 ஓட்டங்களைக் கொடுத்துள்ளது றோயல் சலஞ்சர்ஸ். இதன் மூலம் ஐ .பி. எல். களத்தில் அதிக ஓட்டங்களைக் கொடுத்த அணியாகவும் ஆர். சி. பி. அறியப்படுகிறது.

நடப்பு சீசனில் 7 போட்டிகளில் விளையாடி ஒரே ஒரு வெற்றியை மட்டுமே ஆர். சி. பி. பெற்றுள்ளது. இதில் தொடர்ச்சியாக 5 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது அந்த அணி. இதன் காரணமாக புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் 2 புள்ளிகளுடன் உள்ளது ஆர். சி. பி. அணி என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# எனக்கு பதில் வேறு வீரரை தெரிவு செய்ய கூறினேன்




பெங்களூரு, ஏப். 17

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் இடைவேளை தேவை என்பதை உணர்ந்தேன். அதனால் போட்டியிலிருந்து விலகியதாக றோயல் சலஞ்சர்ஸ் அணியின் முக்கிய வீரர் மேக்ஸ்வெல் கூறியுள்ளார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் ஆறு இன்னிங்ஸ்களில் வெறும் 32 ஓட்டங்களை மட்டுமே மேக்ஸ்வெல் எடுத்துள்ளார். நேற்று முன்தினம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் கட்டை விரல் காயம் காரணமாக மேக்ஸ்வெல் விளையாடவில்லை என்று கூறப்பட்டது. ஆனால், மேக்ஸ்வெல் நேர்மையாக தனக்கு இளைவேளை தேவை என்பதை தான் வேண்டிக் கேட்டதை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

## மேக்ஸ்வெல் வெளிப்படை

சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான தோல்விக்குப் பிறகு மேக்ஸ்வெல் கூறுகையில்: ““நான் கடந்த போட்டி முடிந்தவுடன் நேராக அணித் தலைவர் டூப்ளசியிடமும், பயிற்சியாளர்களிடமும் சென்று எனக்கு பதில் வேறு வீரரை விளையாட வைப்பதற்கான தருணம் இது என்றேன். எனக்கு கடந்த காலத்திலும் இப்படி நடந்துள்ளது. ஆடிக் கொண்டேயிருப்பேன். திடீரென ஏதோவொரு மனத்தடை ஏற்படும். எனவே, எனக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் இடைவேளை தேவை என்பதை உணர்ந்தேன்.

மீண்டும் இந்த ஐ. பி. எல். தொடரில் வாய்ப்புக் கிடைக்குமானால் அதற்குள் நான் என் உடல், மன நிலையை திடப்படுத்திக் கொள்வேன். எங்கள் அணியில் பவர் பிளேக்குப் பிறகே பெரிய குறைபாடு உள்ளது. அங்கு வந்து ஆடுவதுதான் என் பலம்.துடுப்பாட்டத்தில் நான் நம்பிக்கையளிக்கும் பங்களிப்புக்களைச் செய்யவில்லை. 7 போட்டிகளில் 6 தோல்வி என்னும் நிலையில் எனக்குப் பதில் வேறு வீரருக்கு வாய்ப்பளிப்பது தான் சிறந்தது என்று கருதுகிறேன்.

அப்படி வாய்ப்புக் கிடைக்கப் பெற்றவர்கள் தன்னை நிரூபிக்கவும் முடியும். முடிந்தால் அந்த இடத்தையும் அவர் தக்கவைக்க முடியும். ரி - 20 போட்டிகள் விநோதமானது. மிகவும் கடினமாக முயற்சித்து ஆடுவோம். இதனால் அடிப்படைகளை மறந்து விடுவோம்- என்று மேக்ஸ்வெல் கூறினார். (எ)

# ஈரானுக்கு பதிலடியாக இஸ்ரேல் என்ன செய்யப் போகிறது?

## அமெரிக்காவும் முழுப் போரில் இறங்குமா?



ஈரானால் ஒரே இரவில் ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களில் 99 சதவீதத்தை தங்கள் இலக்குகளைத் தாக்காதவாறு இடைமறித்து விட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு சிரியாவில் உள்ள ஈரானிய தூதரக வளாகத்தின் மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் கூறியது.

இந்தப் பிரச்னையில் அடுத்து என்ன நடக்கும் என்பது சனி இரவு நடந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் எவ்வாறு பதிலளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்து அமையும்.

ஈரானிய ஆட்சியை முற்றிலும் விரும்பாத நாடுகள் உட்பட பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளும் இந்த விவகாரத்தை நிதானமாக அணுக வலியுறுத்தியுள்ளன.

ஈரானின் நிலைப்பாடு பின்வருமாறு உள்ளது, "கணக்கு சரி செய்யப்பட்டது, அதுதான் இந்த விஷயத்தின் முடிவு. எங்களைத் திருப்பித் தாக்காதீர்கள் அல்லது உங்களால் தடுக்க முடியாத அளவுக்கு ஒரு வலுவான தாக்குதலை நடத்துவோம்."

ஒரு குறிப்பிடத்தக்க பதிலைக் கொடுப்போம் என இஸ்ரேல் ஏற்கனவே சபதம் செய்துள்ளது. தற்போதைய இஸ்ரேல் அரசாங்கம், இஸ்ரேலிய வரலாற்றில் மிகவும் கடுமையான மற்றும் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ள விரும்பாத ஒரு அரசாகக் கருதப்படுகிறது.

அக்டோபர் 7 அன்று தெற்கு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களுக்கு சில மணி நேரங்களுக்குள் இந்த அரசு பதிலடி கொடுத்தது.

எனவே ஈரானின் இந்த நேரடித் தாக்குதலுக்கு பதிலளிக்காமல் விட்டுவிட வாய்ப்பில்லை, இருப்பினும் களத்தில் அதற்கென சில வரம்புகள் உள்ளன.

### இஸ்ரேல் முன் இருக்கும் வாய்ப்புகள் என்ன?

இஸ்ரேல், பிராந்தியத்தில் உள்ள அண்டை நாடுகளின் பேச்சைக் கேட்டு 'மூலோபாய பொறுமையைக்' கடைபிடிக்கலாம். ஈரானைத் தாக்குவதற்குப் பதிலாக லெபனானில் உள்ள ஹிஸ்புலா அல்லது சிரியாவில் உள்ள ராணுவத் தளங்கள் போன்ற ஈரானின் நண்பர்களை குறிவைப்பதைத் தொடரலாம். இதை இஸ்ரேல் பல ஆண்டுகளாக செய்து வருகிறது.

ஈரான் எந்த தளங்களில் இருந்து ஏவுகணைகளை ஏவியதோ, இஸ்ரேல் அதைக் குறிவைக்கலாம். நீண்ட தூர ஏவுகணைத் தாக்குதல்களால் பதிலடி கொடுக்க முடியும்.



ஆனால் அவ்வாறு நடந்தால் ஈரான் அதை போரின் தொடக்கமாகப் பார்க்கும். ஏனெனில் இஸ்ரேல் நேரடியாக ஈரானைத் தாக்குவது அதுவே முதல் முறையாக இருக்கும். இதுவரை பிராந்தியத்தைச் சுற்றியுள்ள ஈரான் ஆதரவு போராளி அமைப்புகளை மட்டுமே இஸ்ரேல் தாக்கியுள்ளது.

அவ்வாறு இல்லையென்றால், ஈரானின் சக்தி வாய்ந்த புரட்சிகர காவலர் படைக்கு சொந்தமான தளங்கள், பயிற்சி முகாம்கள் மற்றும் கட்டுப்பாட்டு மையங்களைத் தாக்கி, இஸ்ரேல் பதிலடி கொடுக்கலாம். இது விரிவான பதிலடி தாக்குதலாக இருக்கும்.

பிந்தைய இரண்டு விருப்பங்களில் ஏதேனும் ஒன்றை இஸ்ரேல் தேர்ந்தெடுத்தால், ஈரான் ஒரு புதிய தாக்குதலை மேற்கொள்ளும் அபாயம் உள்ளது.

### அமெரிக்காவையும் முழு போரில் ஈடுபட தூண்டுமா?

இங்கே முக்கிய கேள்வி என்னவென்றால், இவை அனைத்தும் ஈரான் - இஸ்ரேல் பிரச்னையில் அமெரிக்காவையும் இழுத்துவிடுமா என்பது தான். அப்படி அமெரிக்கா உள்ளே நுழைந்தால், ஈரானுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையே முழு அளவிலான போருக்கு அது வழிவகுக்கும்.

ஆறு வளைகுடா அரபு நாடுகளிலும், சிரியா, ஈராக் மற்றும் ஜோர்டானிலும் அமெரிக்காவின் ராணுவத் தளங்கள் உள்ளன. பல ஆண்டுகளாக சர்வதேச தடைகளை மீறி ஈரான் தயாரித்துள்ள பாலிஸ்டிக் மற்றும் பிற ஏவுகணைகளின் இலக்குகளாக இந்த அமெரிக்க ராணுவத் தளங்கள் மாறக்கூடும்.

ஒருவேளை இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தினால், ஈரான் நீண்ட காலமாக அச்சுறுத்தி வந்த ஒன்றைச் செய்யக்கூடும். அதாவது வெடிகுண்டுகள், ட்ரோன்கள் மற்றும் அதிவேக போர்க் கப்பல்களைப் பயன்படுத்தி சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை மூட ஈரான் முயற்சி செய்யலாம்.

அவ்வாறு நடந்தால் உலகின் எண்ணெய் விநியோகத்தில் கிட்டத்தட்ட கால் பகுதியை ஈரான் துண்டித்துவிடும்.

அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளை பிராந்திய அளவிலான போருக்கு இழுத்துச் செல்லக்கூடிய ஒரு பயங்கர நிகழ்வாக இது அமைந்துவிடும். இதைத் தவிர்க்க தான் பல அரசாங்கங்கள் இப்போது 24 மணி நேரமும் போராடி வருகின்றன.




### இஸ்ரேலை தாக்கியதால் ஈரானில் மகிழ்ச்சி

முதல் முறையாக ஈரான் தனது எல்லையில் இருந்து நேரடியாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. ஈரான் இஸ்லாமியக் குடியரசின் புரட்சிகர காவலர்கள் படை மீது பிராந்தியத்தில் உள்ள நட்பு நாடுகள் மற்றும் உள்நாட்டு ஆதரவாளர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் இது முக்கியமானதாகக் கருதப்பட்டது.

ஈரானின் விருப்பத்தையும், அதன் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களின் திறனை உலகிற்கு நிரூபிக்கும் நோக்கமும் இந்தத் தாக்குதலின் பின்னே இருந்தது.

நாட்டின் இஸ்லாமிய அமைப்பைப் பாதுகாக்கவும், ஆயுதப் படைகளுக்கு தேவையான கூடுதல் பலத்தை வழங்கவும் 45 ஆண்டுகளுக்கு முன்பு ஐஆர்ஜிசி உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு இன்று ஈரான் மற்றும் பிராந்தியத்தில் ஒரு பெரிய இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக மாறியுள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

# பரந்த கோட்பாடுகளில் இருந்து நடைமுறையில் பிரச்னைகள் தீர்வுவரை!

கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது இந்த தடவை புத்தாண்டு கொண்டாட்டங்கள் களை கட்டவில்லை. புத்தாண்டுப் பிறப்புடன் பாரம்பரியமாக இணைந்ததாகக் காணப்படுகின்ற பட்டாச சத்தங்களும் வாணவேடிக்கைகளும் கடந்த காலத்தையும் விட மிகவும் குறைந்ததாகவே இருந்தன. மக்கள் மீதான பொருளாதாரச் சுமையின் தாக்கத்தை குறைந்தளவு புத்தாடைக் கொள்வனவிலும் புத்தாண்டுக்கான ஏனைய ஏற்பாடுகளிலும் காணக்கூடியதாக இருந்தது.

மக்களின் வருமானத்தை விடவும் செலவினங்கள் அதிகமாக இருக்கும் நிலையில், சேமிப்புகள் எல்லாம் முன்னைய மாதங்களில் தீர்ந்துவிட்டதால் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்கு செலவிட அவர்களிடம் பணமில்லை என்பதே உண்மை.

உலகவங்கி ஏப்ரில் 2 ஆம் திகதி வெளியிட்ட "மீட்புக்கான பாலங்கள்" (**World Bank Update; Bridges to Recovery**) என்ற தலைப்பிலான அறிக்கையில் இலங்கையில் வறுமை கடந்த நான்கு ஆண்டுகளில் - 2019 தொடக்கம் 2024 வரை பெரும்பாலும் 26 சதவீதம் அதிகரித்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. 60 சதவீதமான இலங்கைக் குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சி கண்டிருப்பதுடன் பல குடும்பங்கள் மத்தியில் உணவுப் பாதுகாப்பின்மை, மந்தபோசாக்கு மற்றும் குன்றிய வளர்ச்சி அதிகரித்திருக்கிறது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

கொண்டாட்டங்களுக்கு செலவுசெய்வதில் மக்களுக்கு நம்பிக்கையை இழக்கச்செய்திருக்கும் இந்த யதார்த்த நிலைக்கு மாறாக, இலங்கைக்கு ஆதரவளிக்கும் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து பொருளாதார மீட்சி பற்றிய நேர்மறையான அறிக்கைகள் புத்தாண்டுடன் சேர்ந்து வந்திருக்கின்றன.

இலங்கையில் மீட்சிக்கான தெளிவான அறிகுறிகளை காணக்கூடியதாக இருக்கிறது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் புதிய வளர்ச்சி தென்பட்டது. பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வீழ்ச்சி கண்டது. வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பு தொடர்ந்து அதிகரித்துவருகிறது. நாணயமாற்று வீதத்திலும் விகிதத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியிருக்கிறது.

மேலும் சுற்றுலாப் பயணிகள் வருகையும் வெளிநாடுகளின் வேலைசெய்யும் இலங்கையர்கள் அனுப்பும் பணத்தின் தொடர்ச்சியான வருகையும் மெச்சத்தக்க மீட்சியைக் காட்டுகின்ற அதேவேளை விநியோக நிலைமையும் மேம்பட்டிருக்கிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் எதிர்வு கூறல்கள் மறுசீரமைப்பின் தொடர்ச்சியிலும் பாவனையாளர்கள் மற்றும் வர்த்தகத்துறையின் சிறந்த உணர்விலும் தங்கியிருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கிறது என்பதும் தொடர்ந்தும் அதே பாதையில் பயணம் செய்யவேண்டியது அவசியம் என்பதுமே சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் சாராம்சமாகும். பணவீக்கம் மற்றும் பட்ஜெட் பற்றாக்குறைகள் தொடர்பான பெரும்பாக புள்ளிவிபரங்கள் குறைவடைந்திருப்பதாக அந்த நிதி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

ஆனால், அவற்றின் அறிக்கைகளில் எச்சரிக்கைகளும் காணப்படுகின்றன. கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுவதற்கு கஷ்டப்படும் மக்கள் பிரிவினரின் தேவைகளைக் கவனிப்பதில் கூடுதல் அக்கறை காட்டப்படவேண்டும் என்பது அந்த எச்சரிக்கைகளில் ஒன்று.

உதாரணமாக, வறியவர்கள் மற்றும் பலவீனமான பிரிவினர் மீதான தாக்கத்தை தணிப்பதில் அரசாங்கம் அக்கறை காண்பிக்க வேண்டியது அவசியம் என்றும் பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணிகளை கையாளுவதற்கு மறுசீரமைப்பு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக் காட்டியிருக்கிறது.

**கொள்கைத் தெளிவு**

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் இந்த முக்கியமான நிறுவனங்களின் அறிக்கைகளில் எச்சரிக்கைத் தொனியில் அமைந்திருக்கும் இரண்டாவது அம்சம் பொருளாதார மறுசீரமைப்புச் செயன்முறை சுமுகமாக நடைமுறைப்படுத்தப்படுவதை தேர்தல்கள் பாதிக்கக்கூடிய ஆபத்து பற்றியதாகும். இலங்கையில் வரவிருக்கும் தேர்தல்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார மீட்சியைப் பாதிக்கக்கூடும் என்று அவை கவலை வெளியிட்டிருக்கின்றன.

தேர்தல்களைச் சூழ்ந்திருக்கும் நிச்சயமற்ற தன்மை இலங்கையின் பொருளாதார நிலைவரத்தில் கீழ் நோக்கிய போக்கொன்றை ஏற்படுத்துகின்றது. இது சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் ஒரு தாமதத்தை ஏற்படுத்தி பொருளாதார உறுதிப்பாட்டை நோக்கிய நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதற்கு வழிவகுக்கக்கூடும். தேர்தல்களின் விளைவாக சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் இவ்வருடத்தின் இரண்டாவது அரைப்பகுதிக்கு விரிவுபடுத்தப்படக்கூடும். அதனால் அரசியல் விளைவுகள் ஏற்படலாம் என்று அவை எச்சரிக்கை செய்திருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் நிறைவுசெய்யப்படும் வரை தேர்தல்கள் நடத்தப்படமாட்டாது என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு எதிர்வரும் அக்டோபரில் நடத்தப்பட வேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலை ஆபத்துக்குள்ளாக்குமா என்ற கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதானமாக மேற்குலக ஜனநாயக நாடுகளினதும் ஜப்பானினதும் ஆதரவைக்கொண்ட இந்த சர்வதேச நிதி நிறுவனங்கள் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை பாதுகாக்கவேண்டும் என்பதற்காக தேர்தல்கள் நடத்தப்படக்கூடாது என்று வாதிடக்கூடிய சாத்தியம் இல்லை. அநாவசிய செலவினங்களை மட்டுப்படுத்தும் அதன் முயற்சிகளை அரசாங்கம் தளர்த்தி மக்களின் வாக்குகளைப் பெறும் வழிவகையாக வரிகள் குறைப்பு மற்றும் மானியங்கள் அதிகரிப்பு போன்ற ஜனரஞ்சகமான நடவடிக்கைகளில் இறங்கும் என்பதே கூடுதல் கவலைக்குரிய விடயமாக இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான முன்னைய 16 உடன்படிக்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தவறிய இலங்கையின் வரலாறு தற்போதும் அரசாங்கம் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றாமல் விட்டுவிடலாம் என்பதற்கான ஒரு எச்சரிக்கையாகும். தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் சர்வதேச நாணயத்துடனான செயற்திட்டம் குறித்து மீள்பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக பிரதான எதிர்க்கட்சிகளான சமகி ஜன பலவேகயவும் ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பி.) கூறியிருப்பது கவலையை மேலும் அதிகரிக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தின் மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் மிகவும் முக்கியமானது என்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அடுத்த அரசாங்கத்தை அமைக்கக்கூடிய சாத்தியத்தைப் பொறுத்தவரை முன்னரங்கத்தில் விளங்கும் இரு பிரதான எதிர்க்கட்சிகளும் அவற்றின் பொருளாதார நிலைப்பாடுகளை தெளிவு படுத்தவேண்டியது முக்கியமானதாகும். குறிப்பாக, ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அந்த கட்சி கடந்த காலத்தில் சர்வதேச சந்தைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியை நிராகரித்த மார்க்சியப் பின்னணி ஒன்றைக் கொண்டிருப்பதால் அதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

ஜே.வி.பி.யின் பொருளாதாரச் சிந்தனை பாரம்பரியமாக சர்வதேச வல்லாதிக்க நாடுகளின் சுரண்டலைச் சந்தேகிப்பதாகவே இருந்துவந்திருக்கிறது. அத்துடன் அரசை அபிவிருத்தியின் இயந்திரமாகக்கொண்ட சுய சார்பு பொருளாதார அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கையுடையதாகவும் அந்த கட்சி விளங்கியது.

ஆனால், அதே காரணத்துக்காகவும் முற்போக்கான ஒரு மாற்று என்ற தோற்றப்பாடு காரணமாகவும் நாட்டின் பொருளாதாரத்தின் திடீர் விழ்ச்சியின் பின்புலத்தில் "முறைமை மாற்றத்தை " வேண்டிநின்ற அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான சூழ்நிலையில் தேசிய அரசியலில் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியாத முக்கிய சக்தியாக ஜே.வி.பி. வெளிக் கிளம்பியிருக்கிறது.

**முறைமை மாற்றம்**

பொருளாதார நிபுணர்கள் மற்றும் அறிவுஜீவிகள் மத்தியில் இருக்கும் பொதுவான கருத்தொருமிப்புக்கு இசைவான முறையில் தற்போது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் முக்கியத்துவத்தை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்கிறது போன்று தெரிகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்திட்டத்தை கைவிடப்போவதில்லை, ஆனால் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நிதித்துறை இலக்குகளை அடையவேண்டிய தேவையும் வருவாய்க்கும் செலவினத்துக்கும் இடையால் ஒரு சமநிலையைப் பேணவேண்டிய தேவையும் இருக்கிறது. வங்குரோத்து நிலையின் விளைவாக சமுதாயத்தின் மேல் மட்டங்களில் உள்ளவர்களை விடவும் அடிமட்டங்களில் உள்ள மக்களே சுமைகளை தாங்கவேண்டியிருக்கிறது. இந்த சுமைகள் சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் பகிரப்படவேண்டும். சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களினால் ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை குறித்து செய்திப் பத்திரிகைகளில் வருகின்ற பெருவாரியான விளம்பரங்கள் மூலம் சமுதாயத்தின் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் அனுபவிக்கும் இடர்பாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. அரசாங்கம் அவர்களைப் பாதுகாப்பதற்கு முயற்சிக்காமல், தோல்வியடைய அனுமதிக்க முடியாத அளவுக்கு பெரியவையாக இருக்கும் வர்த்தகங்களைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமை கொடுக்கிறது.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

மக்கள் வேண்டிநிற்கும் முறைமை மாற்றம் பொருளாதார நீதியைப் பற்றியது மாத்திரமல்ல. இன,மத சிறுபான்மைச் சமூகங்களுக்கு முக்கியமானதாக இருக்கும் இனங்களுக்கிடையிலான நீதியுடன் தொடர்புடைய பிரச்னைகளையும் அது உள்ளடக்குகிறது. இந்த பிரச்னை மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கின்ற போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியில் இருக்கும் இரு வருடங்களிலும் அதற்கு முன்னர் பிரதமராக இருந்த காலப் பகுதிகளிலும் தீர்வைக் காண்பதற்கு தவறிவிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனக்கு இருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் துறைசார் நிபுணர்கள் குழுவொன்றின் மத்தியில் அண்மையில் முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்றை நிகழ்த்தினார். அதில் அவர் சமுதாயத்தில் உள்ள இன,மத,சாதி மற்றும் வர்க்கப் பிளவுகளை தெளிவாக அடையாளம் காட்டினார்.

அதேபோன்று ஜே.வி.பி.தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக குறுகிய இனத்துவ தேசியவாதம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற வரலாறு பற்றி விரிவான ஆய்வுகளைச் செய்து உரைகளை நிகழ்த்துகிறார். 1948 ஆம் ஆண்டில் மலையக இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது முதல் இதுகாலவரையான சிறுபானமைச் சமூகங்களுக்கு எதிரான பாகுபாட்டு நடவடிக்கைகளை அவர் விளக்குகிறார்.

ஜே.வி.பி.தலைவர் தனது புத்தாண்டுச் செய்தியில் இன, மத சிறுபான்மைச் சமூகங்களை தேசிய இனங்கள் என்று குறிப்பிட்டதன் மூலம் பிரதான நீரோட்டத்தில் உள்ள அரசியல் கட்சி ஒன்றுக்கான புதிய மாற்றத்தை வெளிக் காட்டியிருக்கிறார்.

இலங்கையில் உள்ள சமூகங்கள் கலாசார, மத மற்றும் மொழிக் குழுக்கள் மாத்திரமல்ல, அவை அரசியல் அடையாளங்களைக் கொண்டவையுமாகும். அவை தங்களது அடையாளங்களைப் பாதுகாக்க விரும்புவதுடன் எந்த பாகுபாடும் இன்றி இலங்கை அரசினால் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன.

அவற்றை தேசிய இனங்கள் என்று என்று வர்ணிப்பதில் ஜே.வி.பி. தலைவர் மார்க்சிய அரசியல் பாரம்பரியத்தை பயன்படுத்துகிறார். அந்த பாரம்பராயத்தில் பிராந்திய சுயாட்சி நேர்மறையான ஒன்றே தவிர எதிர்மறையானது அல்ல. ஆனால், சமூகங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எத்தகைய யோசனையை நடைமுறையில் முன்வைக்கிறார் என்பதை அவர் தெளிவாகக் கூறவேண்டும். தங்களது கடந்த காலத்தைய முரண்பாடான நிலைப்பாடுகளையும் நடவடிக்கைகளையும் அவர்கள் கையாள வேண்டியிருக்கிறது. அவர்கள் பொருளாதாரம் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பிலும் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதில் இருந்து இது வித்தியாசமானதல்ல.

இவையெல்லாம் இலங்கையை வழிநடத்துவதற்கும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தேசிய ஐக்கியத்துக்காக முறைமை மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் ஆசைப்படுகின்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டியிருக்கும் சிக்கல்களாகும்.

வர்த்தகத்துறையிலும் அரசியலிலும் அதிகார நிலைகளில் உள்ளவர்களினதும் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு அன்றாட வாழ்க்கையை சமாளிக்க முடியாமல் தவிக்கும் சமுதாயத்தின் அடிமட்டங்களில் உள்ளவர்களினதும் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு பதில்களைக் கூறவேண்டியது அவசியமாகும்.

# ஈரானுக்கு பதிலடியாக இஸ்ரேல்...





(14ம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை இரவு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஆதரவாளர்கள் பலர் பாலத்தீன ஆதரவு சின்னங்களுடன் தெஹ்ரானின் தெருக்களில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

“சிரியா மற்றும் பிற இடங்களில் உள்ள ஈரானிய தளபதிகள் கொல்லப்படுவதைத் தடுக்க, இஸ்ரேலைத் தாக்குவது சரியான முடிவு என்று நம்புகிறேன்,” என்று ஈரான் அரசாங்கத்தை ஆதரிக்கும் 20 வயது பெண் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் இஸ்லாமியக் குடியரசை விமர்சிக்கும் ஏராளமான ஈரானியர்கள், “இந்த அரசின் செயல்பாடுகள் அனைத்து ஈரானிய மக்களின் கருத்துகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது எனச் சொல்ல முடியாது” என்கிறார்கள்.

“நாங்கள் இஸ்லாமிய குடியரசு அல்ல, உண்மையான ஈரான். ஈரானியர்களே தற்போதைய ஆட்சியுடன் போரில் ஈடுபட்டுள்ளனர். இஸ்ரேல் உட்பட எந்த தேசத்தின் மீதும் எங்களுக்கு விரோதம் இல்லை” என்று 40 வயதுடைய ஒருவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் பதிலடி குறித்த அச்சம்

தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் பதிலடி எவ்வாறு இருக்கும் என ஈரானியர்கள் அஞ்சுவதால், சனிக்கிழமை இரவு மக்களிடையே பதற்றம் அதிகரித்தது. உணவு, எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைக்க குடிமக்கள் முயன்றனர்.

தெஹ்ரான் மற்றும் பிற முக்கிய நகரங்களில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கத் தொடங்கினர். அதே நேரத்தில் பல்பொருள் அங்காடிகளும் நிரம்பி வழிந்தன.

இஸ்ரேல் தனது எல்லையை நோக்கி ஏவப்பட்ட 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களில் 99 வீதம் வெற்றிகரமாக இடைமறித்ததாகக் கூறினாலும், ஈரானிய அதிகாரிகள் தாக்குதலை ஒரு வெற்றியாகக் கொண்டாடினர். உயிரிழப்புகளைப் பொருட்படுத்தாமல் அதன் அடையாள தாக்கத்தை வலியுறுத்தினர்.

ஈரானின் தலைமைத் தளபதி, மேஜர் ஜெனரல் முகமது பாகேரி, “இஸ்ரேலுக்குள் எங்களது இலக்குகளில் ‘இஸ்ரேலிய நோட்டம் விமானப்படை தளமும்’ இருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பு இங்கிருந்து கிளம்பிய இஸ்ரேலிய விமானங்கள், டமாஸ்கஸில் உள்ள ஈரானிய துணைத் தூதரகத்தில் தாக்குதல் நடத்தின. இதன் விளைவாக 7 ஐஆர்ஜிசி தளபதிகள் கொல்லப்பட்டனர்” என்று கூறினார்.

ஈரான் தனது இலக்கை அடைந்துவிட்டதாகவும், மேற்கொண்டு தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடரும் எண்ணம் இல்லை என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேலின் எந்தவொரு புதிய தாக்குதலுக்கும் ஈரானிடமிருந்து கணிசமான, வலுவான ஒரு பதிலடி கிடைக்கும் என்று ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி எச்சரித்தார்.

புதிய தாக்குதல்களை முன்னெடுக்காமல், இப்போது நிலவும் போர் பதற்றத்தை தணிப்பது தான் ஈரானின் நோக்கமாக இருக்கிறது. இராணுவ அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளும் நடத்தப்பட்ட தாக்குதலில் திருப்தி அடைந்ததாகத் தெரிகிறது.

